பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 254 ஆடி 25 ஆம் நாள் சனிக்கிழமை · 10 ஒகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## இந்தியாவை பகைத்து பிரபாகரனை மீண்டும் உருவாக்க வேண்டாம்

ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10
இந்தியா போன்ற நாடுகளை பகைத்துக் கொள்ளக் கூடாது. ஆரம்பத்தில் இந்தி யாவை பகைத்துக் 19

# இன்னொரு பிரபாகரன் உருவாகுவதை தீர்மானிப்பது அரசின் கையில்தான் இருக்கிறது

## வல்லை மண்ணில் வைத்து நிதி அமைச்சர் முன்பாகத் தெரிவித்தார் சுமந்திரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 10
'வல்வெட்டித்துறை மண்ணிலிருந்து இரண்டுபேர் உலக சாதனை படைத்துள்ளார்கள். ஒருவரை இன்று நினைவுகூருகின்றோம். மற்றவரைப் போன்று இன்னொருவர் எங்கள் மத்தியிலிருந்து எழுவதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது தெற்கு மக்களும், உங்கள் அரசியலும், அரசதலைவரும்தான்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அந்த மண்ணில் பிறந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத்தான், சுமந்திரன் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். 19

## டொலர்களில் லாபம் பெறும் சந்ததியை உருவாக்குவேன்

சரியான முடிவெடுங்கள் என்கிறார் அமைச்சர் சஜித்

வவுனியா, ஓக. 10
பொருளாதார அபிவிருத் தியை ஏற்படுத்தி டொலர்க ளில் இலாபத்தை பெறும் ஒரு சந்ததியை உருவாக்கு வதே எனது நோக்கம். அதற்கு நவம்பர் மாதத்தில் நீங் 05

## சஜித்தையே பரிந்துரைத்துள்ளோம் அவரே தேர்தலில் வெல்லக்கூடியவர்

யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மங்கள

யாழ்ப்பாணம், ஓக. 10
அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வேட்பாளர் சஜித் பிரேமதாச என்றுதான் நாங்கள் நினைக் கின்றோம். அவ்வாறு வெற்றிபெறக் கூடிய 19

## சித்தார்த்தன் கோத்தபாயவை இரகசியமாகவே சந்தித்தார்

கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பி னர் த.சித்தார்த்தன், முன் னாள் பாதுகாப்புச் செயலர் கோத்த 19

## வாள்வெட்டுக் குழுவினர் மீண்டும் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் இரவு அரச அலுவரின் வீட்டுக்குள் நேற்று இரவு 8 மணியளவில் புகுந்த 6 பேர் கொண்ட வாள்வெட் டுக் குழுவினர், வீட்டின் மீதும், வீட்டின் முன்னால் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த வாகனங் கள் மீதும் தாக்கு 19

## பல்டி அடித்தார் கோத்தபாய

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமலேயே தான் வெற்றி பெறுவேன் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 07

## முதலில் வேட்பாளர் பின்னரே கூட்டணி!

சஜித் விடாப்பிடி

கொழும்பு, ஓக. 10
ஐக்கிய தேசியக் கட்சி அரச தலைவர் வேட்பாளரை அறிவித்த பின்னரே புதிய கூட்டணியை அமைக்க 05

## புலிகளின் முதுகெலும்பை ஐ.தே.கவே உடைத்தது

அதன் பின்னரே கோத்தபாய நாட்டுக்கு வந்தார் என்கிறார் கிரியெல்ல

கொழும்பு, ஓக. 10
நாம் எமது ஆட்சியில் கருணா அம்மான் போன்ற வர்களை கொழும்புக்கு வரவழைத்து, பின் னர் புலிகளின் 07

## அமெரிக்க குடியுரிமையை கைவிட்டதாக கோத்தா அறிவிக்கவில்லை

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10
அமெரிக்க குடியுரிமையை கைவிட்டு விட்டதாக முன் னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜ பக்ச, இதுவரை 19

## 30 ஆங்கில ஆசிரியர்களை அனுப்புகிறது அமெரிக்கா

கொழும்பு, ஓக. 10
அமெரிக்க அரசு அடுத்த ஆண்டு 30 ஆங்கில தொண்டர் ஆசிரி யர்களை இலங் 06

## வல்லையில் ஆசிரியையின் தாலிக் கொடி அறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாணம் வல்லைப் பகுதியில் உந்துருளியில் பயணித்த ஆசி ரியையின் 19

## கூட்டமைப்பினர் சிலர் மகிந்தவுடன் சந்திப்பு 06

## வேட்பாளராக கோத்தா அறிவிப்பு ஒரு வாரத்துக்கு ஆலயத் தரிசனம்

கொழும்பு, ஓக. 10
அரச தலைவர் தேர்தலுக் கான பொதுமக்கள் முன்ன ணியின் வேட்பாளராக கோத்தபாய ராஜ பக்சவை, எதிர்க் 19

## அடியார்களைச் சோதிப்பது மனக் கஷ்டமாகவுள்ளது

தமிழ் மக்கள் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தில் முன்னர் ஒருபோ தும் இல்லாதவாறு அடியார்களை 06

## நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரவில்லை

யாழ்ப்பாண மாநகர மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 10
நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் பக்தர்களை சோதனைக்கு உட் படுத்துமாறு நாங்கள் பாதுகாப்புத் தரப்பினரைக் கோரவில்லை. பாது காப்புத் தொடர்பாக எந்தக் கோரிக் கைகளையும் எந்தவொரு தரப்புக்கும் நாங்கள் 07

## கோத்தாவை அழைக்காத இந்தியா

கொழும்பு, ஓக. 10
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்திப் பதற்கு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜ பக்ச மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ள தாகத் தெரியவருகின்றது. 06

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

தனித்துவமான உயர்கல்விச் சேவை.
தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
For more information: 0777 174 443




BLC CAMPUS
Entry requirement
HND / any Equal Qualification in the similar study
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் மாத

# எண் ஜோதிட பலன்கள்



### 7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

புத்திக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஏழாம் எண் அன்பர்களே! இந்த மாதம் எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பதில் இருந்த தாமதம் நீங்கும். புதிய நண்பர்களுடன் பழக்கம் ஏற்படும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும் குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. அக்கம் பக்கத்தினருடன் சில்லறை சண்டைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை வரலாம்.

பெண்களுக்கு அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தெய்வபக்தி அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும்.

உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. அரசியல்துறையினருக்கு மன துயரம் நீங்கும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியைப் பற்றி பதற்றம் ஏற்பட்டு நீங்கும். பாடங்களை ஒருமுறைக்கு இருமுறை படித்து புரிந்து கொள்வது நல்லது.

### 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

எந்தச் சூழ்நிலையிலும் முயற்சியை தளர விடாத எட்டாம் எண் அன்பர்களே! இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். பொருள்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது அவசியம். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவி டப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும்.

தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு. நிலுவையில் உள்ள பணம் வருவது தாமதப்படும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது.

பெண்களுக்கு பயணங்களின்போது உடமைகளை கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது. கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும். கடன்பிரச்சினைதீரும். வாகனங்களைப்பயன்படுத்தும்போது கவனம்தேவை. மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். பாடங்கள் படிப்பதில் இருந்த தடைகள் நீங்கி ஆர்வமாகப் படிப்பீர்கள்.

### 9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒன்பதாம் எண் அன்பர்களே! இந்த மாதம் ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றினாலும் அதைச் செயற்படுத்துவதில் தாமதம் உண்டாகும். பேச்சை கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. எந்தவொரு வேலையை செய்யும் போதும் மன மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். வீடு, வாகனம் வாங்கும் சுபச்செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும், பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். வேலையில் உள்ளவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

பெண்களுக்கு வீண் பேச்சை குறைப்பது நல்லது. கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். செல்வநிலை உயரும். இறுக்கமான சூழ்நிலை மாறும்.

அரசியல்வாதிகளுக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எடுத்துக் கொண்ட காரியங்களில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. மாணவர்களுக்கு அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் கவனம் தேவை. பாடங்களைப் படிப்பதில் தீவிரம் காட்டுவீர்கள்.




## உங்களின் பிறந்த திகதியின்படி எந்த நிறம் உங்களுக்கு ராசியானது என்று தெரியுமா?

நிறங்களானது எம்முடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. எமது தோலின் நிறம், உடையின் நிறம், நாம் பயன்படுத்தும் பொருளின் நிறம் என அனைத்துமே எமது வாழ்வில் ஏதோ வித தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எம் எல்லோருக்கும் பிடித்த நிறம் ஒன்று இருக்கும். அதேபோல ராசியான நிறம் என்று இருக்கும்.

**பிறந்த திகதி 5, 14, 23**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் புதன் பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். மற்றவர்களை எளிதில் கவர்ந்து இழுக்கும் இவர்களின் ராசியான நிறம் சாம்பல் ஆகும். இவர்களுக்கு ராசியில்லாத நிறங்கள் அடர் பச்சையும், அடர் சிவப்பும் ஆகும்.

**பிறந்த திகதி 6, 15, 24**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் சுக்கிர பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களின் ராசியான நிறம் அடர் பச்சை மற்றும் அடர் ஊதாவாகும். இவர்களுக்கு ராசியில்லாத நிறங்கள் வெள்ளை, மஞ்சள் மற்றும் பிங்க் ஆகும்.



**பிறந்த திகதி 7, 16, 25**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் கேது பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களின் பிறந்த திகதியின் படி இவர்களுக்கு ராசியான நிறங்கள் என்றால் அது வெள்ளை, மஞ்சள், மெல்லிய பச்சை, மெல்லிய ஊதா போன்றவையாகும். இவர்களுக்கு ராசியில்லாத நிறங்கள் என்றால் எந்த வகையான அடர் நிறமும் இவர்களுக்கு ஆகாது.

**பிறந்த திகதி8, 17, 26**
இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் சனி பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களுக்கு ராசியான நிற மஞ்சள் ஆகும். எந்தச் சூழ்நிலையிலும் மஞ்சள் நிறம் இவர்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். அடர் பச்சை மற்றும் அடர் நீல நிறமும் இவர்களுக்கு ராசியாகும். ஆனால் இவர்களுக்கு ராசியில்லாத நிறம் என்றால் சிவப்பு ஆகும்.

**பிறந்த திகதி 9, 18, 27**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் செவ்வாய் பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இந்த எண்ணில் பிறந்தவர்களுக்கு ராசியான நிறம் எனில் அது சிவப்புதான். ராசியில்லாத நிறம் என்றால் வெள்ளை மற்றும் மெல்லிய நிறங்கள் இவர்களுக்கு ஆகாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸ்திரேலியா விருது விழாவில் 'சூப்பர் டீலக்ஸ்'

தியாகராஜன் குமாரராஜா இயக்கத்தில் வெளிவந்த 'சூப்பர் டீலக்ஸ்' படத்தில் திருநங்கையாக நடித்து பல்வேறு பாராட்டுகளைப் பெற்றிருந்தார் விஜய் சேதுபதி.

இந்தப் படம் ஆஸ்திரேலியாவில் உள்ள 'மெல்போர்ன் இந்திய திரைப்பட விழா'வில் திரையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தப் படம் விருதுக்கும் தேர்வானது. சிறந்த நடிகர், சிறந்த இயக்குநர், சிறந்த படம் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்தப் படம் விருதுகளைப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமன்றி விருதைத் தேர்ந்தெடுக்கும் நடுவர்கள், இந்தப் படத்தைப் பற்றி பெருமையாகவும் பேசியுள்ளனர். இதன் விருது வழங்கும் நிகழ்வு தற்போது மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

## அன்றும் இன்றும்





1990 - 2017










## twitter

**amudu @amuduarattai**

எமக்கு இருக்கும் நோய், எமக்கு தெரிந்தவர்களுக்கும் இருக்கிறது என்று தெரிந்தாலே, எமக்கு பாதி நோய் குணமாகி விட்டது போன்ற உணர்வு வந்து விடுகிறது.

**Mr.கெட்டவன் $2 :)**

கற்றுக் கொடுத்தவர்கள் எல்லாரும் ஆசிரியர் என்றால் என் எதிரியும் எனக்கு ஒரு ஆசிரியர் தான்....!!

**பரம சேகர்(டீ கடை காரன்)**

பொருளாதாரத்தை தேடி அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கிற ஒவ்வொரு ஆறறிவு ஜீவனுமே நோயாளி தான்....

**Raja Raja Chozhan**

உங்களை ஆற்றுப்படுத்த எவரும் பிறக்கவில்லை உங்களைத் தவிர...

**கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar**

தங்க விலை ஏறினால், தங்க நகை அடகுக்கு விலை அதிகமாக கிடைக்குமா என்பது மட்டும் தான் நடுத்தர வர்க்கத்தினரின் கவலை!!!

**எனக்குள் ஒருவன்.!**

நாம் எவ்வளவு கூட்டத்தில் இருந்தாலும் நம் கையில் இருக்கும் ஸ்மார்ட் போன் நம்மைத் தனிமைப்படுத்தி விடுகிறது.







கண்ணில் படுவோரையெல்லாம்
வரைந்துகொண்டேயிருக்கிறது
வெயில்

'பைசா' என்றால்
கோபுரமே சாய்ந்து
விடுகிறது!

யாருக்கும் தெரியாமல்
யாரோ எடுத்துச் செல்கிறார்
யாரோ தெரியாமல்
தவறவிட்ட ரூபாய் நோட்டை
சில நிமிடப் பழக்கத்திலேயே
ஒட்டிக் கொண்டது
கடற்கரை மணல்

எண்ணற்ற ராகங்கள்
வழி தெரியாது
அலைந்து கொண்டிருக்கின்றன
துளையிடப்படாத
மூங்கில் காட்டினுள்!


அத்தனை பறவைகளையும்
தூங்க வைக்க
வெகுநேரமாகும்
அந்த அரச மரத்திற்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 21 . 06 . 1944

இறப்பு 07 . 08 . 2019

### கதிரவேலு சிவராமலிங்கம் (பெரியதம்பி)

தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி. தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவராமலிங்கம் 07.08.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலு - கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும், அருந்தவசிறி (சிறி- லண்டன்). புவனேந்திரராசா (றதி- சுவிஸ்). கவிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். துளசிமலர் (லண்டன்). சுபாசினி (சுவிஸ்). சக்திவேல் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி. மகாலிங்கம் மற்றும் மங்கையற்கரசி. உருக்குமணி. சந்திரா. செல்லம். நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான இராசையா. பரமசாமி. பத்மநாதன். நாகம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை. கந்தசாமி. இராசரத்தினம். காலஞ்சென்ற சின்னதங்கம் மற்றும் செல்லம்மா. குஞ்சம்மா. தங்கம்மா. இராசம்மா. செல்லையா. கிட்டிணசாமி. நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும். கிருஸ்ணர். சுப்பிரமணியம். நாகலிங்கம். கந்தசாமி. பொன்னம்பலம். கௌசலாதேவி. வசந்தராணி. குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகலனும். சயனா. கம்சன். அபினா(லண்டன்). நிருசன். வினோசன். விதுர்சிகா. தஸ்வின் (சுவிஸ்). கிசானி. கிசாந்தன். கீர்த்தன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.0802019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி. கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

தகவல் :
**குடும்பத்தினர்.**

(CS 00663) (14)

**077 989 9676**



தோற்றம் 08 . 02 . 1939

மறைவு 02 . 08 . 2019

### கணபதிப்பிள்ளை துரைராஜா

541, பருத்தித்துறை வீதி. நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை துரைராஜா 02.08.2019 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் தயானந்தன். ஜீவானந்தன். தேவானந்தன் (பிரான்ஸ்). ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாவதி (செல்வராணி) மற்றும் காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னுத்துரை. காலஞ்சென்றவர்களான இராசேந்திரம். மகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயறமணி. சகிலா. தீபா(பிரான்ஸ்) மற்றும் வினோத் (பிரான்ஸ்). சுகிர்தா - வசந்தன் (நோர்வே). கவிதா - சதீஸ்வரன். சதீஸ்கண்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் டெய்சி. கெவின். கிறிஸ். டெனி. சஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிஂயகள் 12.08.2019 திங்கட்கிழமை நடைபெற்று பிரான்ஸில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**59A, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

தகவல் : **சுந்தரம்பிள்ளை, கருணாவதி**
**(செல்வராணி - சகோதரி)**
**021 22[illegible]**

(CS 27259) [illegible]

**பிள்ளைகள் : தயா - 00336 524 41899/ ஜீவா - [illegible]**
**தேவா - 00337 820 97812 (பிரான்ஸ்)**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)



அப்பா !
எமை விட்டு இறையுலகு சென்று
பன்னிரு ஆண்டுகள் ஆனதோ ?
காலம் தான் வேகமாய் ஓடியதோ
ஆனாலும் என்றும் நீங்கள்
நிலையாக நிலைத்துடுவீர் எம் உள்ளத்தில்

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
**"தணிகை", அல்வாய் வடக்கு.**

(CS 27252) (14.17)

மலர்வு **14.03.1947**
உதிர்வு **10.08.2007**

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### மங்கையர்க்கரசி ராஜாராம்

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம் - மகரகம, தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் - வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் )

மலர்வு 21.01.1943

உதிர்வு 05.08.2014

திதி:- தசமி (10.08.2019)

அன்பு. நேர்மை. இறைபக்தி. கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினமாகிய இன்று (10.08.2019) சனிக்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்....

**இல.06, கற்குழி,**
**முதலாம் ஒழுங்கை,**
**தபாலக வீதி ஊடாக சாவகச்சேரி.**
**021 227 1493, 077 723 8528**

**இ.ராஜாராம்**
**(பாசமிகு கணவர் - சமாதான நீதிவான்)**
**அன்புத் தம்பிமார், அன்புத் தங்கை,**
**அன்பு மாமி, மைத்துனி, மைத்துனர்**
**மற்றும் மருமக்கள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி சிவநாதன்



டச்சு றோட் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஐயாகடையடி மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிவநாதன் 08.08.2019ல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சிவநாதனின் (அறங்காவலர் மீசாலைகிழக்கு பன்றிக் கந்தசாமி கோவில்) அன்பு மனைவியும் சிவநேசன்(Eagle Institute, Managing Di rector and Lecture, Wellawatta) சிவமங்கை (ஆசிரியை, அல் ஹிதயா கல்லூரி கொழும்பு) சிவரூபன் (விரிவுரையாளர், Internation Training Insti tute, Papuwa New Guinea)ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகம்மாவின் பாசமிகு தங்கையும், மகாராஜி(ஆசிரியர்), சிவனருட் செல்வன் (ஆசிரியர்), செந்தமிழ் அரசி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவஜெயன், சிவமயூராஜினி, சிவஹர்ஷினி, சிவானுஜன், சிவாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0759035653**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













## புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ+து)
## பணிநிலை வெற்றிடம்

**பதவி : - பொதுமுகாமையாளர் : 101/08**

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பொது முகாமையாளர் (101/08) பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் மீளவும் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பூரணப்படுத்தப்பட்டு அத்துடன் கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து "தலைவர் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்" எனும் முகவரிக்கு 20.08.2019 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இதற்கான மேலதிக விபரங்களை 28.06.2019 ஆம் திகதிய உதயன் பத்திரிக்கையின் விளம்பரத்தினூடாகவோ Or புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் Or 076 705 3960 இலக்க தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்
புங்குடுதீவு - நயினாதீவு பல.நோ.கூ.சங்கம்
புங்குடுதீவு - 01

(CS 27263)(14.17)

# கேள்வி அறிவித்தல்

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட நன்கொடை (PSDG)–2019
## பிரமான அடிப்டையிலான நன்கொடை (CBG)-2019
## சபைநிதி வேலைத்திட்டம் (CF)
## சாவகச்சேரி பிரதேச சபை

1. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் தொலைபேசி இல-0212050356, தொலைநகல் - 0212050348 மின்னஞ்சல்: chavakachcherips1@gmail.com மூலமாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் **10.08.2019** ஆம் திகதியிலிருந்து **23.08.2019** ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப **9.00** மணி முதல் **14.00** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவண மொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் அவர்களிடமிருந்து **10.08.2019** ஆம் திகதியிலிருந்து **23.08.2019** ஆம் திகதிவரை மு.ப **9.00** மணிக்கும் பி.ப **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு **23.08.2019ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 11.10.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. பிரமான அடிப்படையிலான நன்கொடை கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்தி மூன்று 25.10.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விபிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/02/ PSDG/2019/06 | சரசாலை வடக்கு தட்சர் கொல்லர் வீதி நிர்மாணம் | 0.74(மில்லியன்) | 02 மாதங்கள் | C9 | 7,500.00 | 08.11.2019 |
| NP/14/41(6)/02/ CBG/2019/01 | மட்டுவில் அமெரிக்கன் மிசன் பாடசாலை வீதி புனரமைப்பு | 3.54(மில்லியன்) | 02 மாதங்கள் | C8 | 36,000.00 | 22.11.2019 |

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை(மில்லியன் ரூபா) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணைவைப்புத் தொகை | வைப்புசெல்லுபடியாகும் காலம் |
| 0 NP/14/41(6)/02/ CF/2019/Baggage(05) | வீதி விளக்குகள் கொள்வனவு | 0.758 | அங்கீகரிக்கப் பட்ட தரம் | 7,600.00 | 08.11.2019 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 16.08.2019 ஆம் திகதிபி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
சாவகச்சேரிபிரதேசசபை,
கொடிகாமம்.
09.08.2019

(C 1(0936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலில்...

வேண்டும் என்று கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலை இலக்காக கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஜனநாயக தேசிய முன்னணியைக் கூடிய விரைவில் அமைக்க தானும் தலைமை அமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக இன்று (நேற்று) செய்திகள் வெளியாகி இருந்தன. அவ்வாறான ஒரு கூட்டணியை அமைக்க தான் நூற்று நூறு அல்ல நூற்றுக்கு இலட்சம் முறை இணக்கம் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன் பிரபல கட்சிகளின் கொள்கைகள் அடிப்படையில் அரச தலைவர் வேட்பாளரை அறிவித்த பின்னரே கூட்டணி அமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ.5.61)

## டொலர்களில்..

கள் சரியான முடிவெடுக்க வேண்டும் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரதேமதாச தெரிவித்துள்ளார்.

வவுனியா பாவற்குளத்தில் இரு மாதிரிக் கிராமங்கள் பயனாளிகளிடம் அமைச்சரால் நேற்றுக் கையளிக்கப்பட்டன. இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025 ஆம் ஆண்டு ஆகும் போது அனைவருக்கும் நிழல். அதாவது அனைவருக்கும் வீடு கிடைத்திருக்க வேண்டும். அதன் ஒரு கட்டமாக இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துடனும் 2 ஆயிரத்து 500 வீடுகளும், அடுத்த கட்டமாக 2020 ஆம் ஆண்டு 5 ஆயிரம் வீடுகளையும், நான்காம் கட்டமாக பத்தாயிரம் வீடுகளையும் என்று மொத்தாக 20 ஆயிரம் வீடுகளை 2025 ஆம் ஆண்டு கட்டி முடித்து இலங்கை தேசத்தில் வாழும் மக்களுக்கு பரிசளிப்பதே எனது நோக்கமாகும்.

பொருளாதார அபிவிருத்தி என்ற வசனம் உங்களுடைய காதுகளில் தினமும் ஒலித்திருக்கும். ஆனால் பொருளாதார அபிவிருத்தியை நீங்கள் அனுபவித்து இருக்க மாட்டீர்கள். ஒரு நாடு அபிவிருத்தியில் வளர வேண்டுமாக இருந்தால் அது பொருளாதரத்துடன் கூடிய அபிவிருத்தியை சந்திக்க நேரிடும். அது ஏற்றுமதியில் தான் தங்கியுள்ளது. எனவே ஏற்றுமதியை நோக்கிய பொருளாதார அபிவிருத்தி நோக்கி நாம் செல்ல வேண்டும்.

1950 - 1980 ஆம் ஆண்டுகளிலே நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மலேசியா, சிங்கப்பூர், கொரியா, யப்பான் போன்ற நாடுகள் ஆசியாவின் பொருளாதார புலிகளாக இருந்தார்கள். அவர்கள் வெளிநாடுகளில் இருந்து நிதிகளை கொண்டு வந்து தமது நாடுகளை அபிவிருத்தி செய்தார்கள். வெளிநாட்டு முதலீடுகளை செய்தார்கள். கிழக்காசியில் ஒரு முக்கியமான நாடாக எமது நாடு இருக்க, பிற நாடுகள் பொருளாதார புலிகளாக எழுச்சி பெறுகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாத்தில் நீங்கள் சரியான முடிவுகளை எடுக்கும் பொழுது, நீங்கள் எனக்கு சரியான முறையிலேயே அந்த ஆதரவை தருவீர்களாகவிருந்தால் நாம் ஏற்றுமதியில் மாற்றத்தை ஏற்படுத்தி, ஏற்றுமதித் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவேன். உங்களுடைய வாக்குகளை சரியான முறையில் சரியான தீர்மானம் எடுத்து சஜித் பிரேமதாச ஆகிய எனக்கு வழங்க வேண்டும். இன்று நாங்கள் ரூபாக்களில் இலாபத்தை பெறுகிறோம். ஆனால் நாங்கள் திட்டமிட்டுக்கும் செயற்பாடுகளை செய்யும் போது டொலர்களில் இலாபத்தை பெற முடியும். டொலர்களில் இலாபத்தை பெறும் ஒரு சந்ததியை உருவாக்குவதே எனது நோக்கம் - என்றார். (ஓ.5.110)

**Biology (உயிரியல்)**
பட்டதாரி ஆசிரியரினால் **தமிழ்** மற்றும் **ஆங்கில** மொழி மூலத்தில் **தனி** மற்றும் **குழு** வகுப்புகளாகக் கற்பிக்கப்படும் CS27268(16/17)
தொடர்பு:- 076 869 1176

**ஆசிரியர் தேவை**
பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு சாவகச்சேரி, நெல்லியடி, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களில் கடமையாற்றக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 468 2951
077 408 3656

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதி மற்றும் அரியாலை, கோப்பாய், யாழ் KKS வீதி, இருபாலை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை. C10942(16/17)
தொடர்புகளுக்கு:- 077 468 2951
077 408 3656

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி கிராமத்தின் நிலப்பரப்பு 6குழி விஸ்திரமான ஆதனமும் அதில் அமைந்துள்ள அண்மையில் கட்டப்பட்ட புதிய கல் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:-
0041 7830 22171(Viber)
071 117 6967

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### ஜோசப் பற்றிக் (ராசா)

மறைவு : 10.08.2006

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பதின்மூன்று வருடமாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

(CS 27255)(14.17)

149/2, கதித்தல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 02 . 1947

மறைவு 02 . 08 . 2017

அமரர்

### சுப்பிரமணியம் யோகநாதன்

(ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பதிகாரி - கட்டடங்கள் திணைக்களம்)

திதி : தசமி (10.08.2019)

அப்பா !
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் கம்பீரமான குரல்
எம் காதில் தினமும் ஒலிக்கிறது
நீங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும்
எப்போதும் எம்மை வழிநடத்தும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்குல தெய்வங்களை
நெஞ்சார பிரார்த்திக்கின்றோம்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

(CS 00662)(14.17)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 02 1946



மறைவு 09 08 2019

### வைத்திலிங்கம் சூரியநாதன்

(பௌதீகவியல் ஆசிரியர் - திருக்குடும்பக் கன்னியர் மடம் - கொழும்பு, ஹாட்லிக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், தும்பளை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சூரியநாதன் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (09.08.2019) அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. வைத்திலிங்கம் தம்பதியரின் அன்புப் புத்லவனும், திரு.திருமதி. நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும்,கோபிசங்கர், கிருஷாந்தி, மாதுளா, அவர்களின் அன்புத் தகப்பனாரும், நிரூபன், அரவிந்தன், சோபிகா, அவர்களின் அன்பு மாமனாரும், நிலாரா, விதுஷா, அமலி, அம்ரா, அம்ரிஷ், ஸ்ரீஷா அவர்களின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, தாமோதரம் பிள்ளை, சத்தியநாதன், மற்றும் பத்மநாதன், அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (10.08.2019) காலை 9.00 மணிக்கு தொடக்கம் பார்வைக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் ஞாயிறு (11.08.2019) காலை 10.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.


**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 0112 721116

1A - 6/3, லக்ஸ்மி கோட்,
எபனேசர் பிளேஸ் தெகிவளை

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடி பாக்கியதுரை



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கார்த்திகேசு விதி, மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி பாக்கியதுரை 09.08.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தர்மபூபதியின் அன்புக்கணவரும் சிறிதரன், பாஸ்கரன், ஜீவரதன், மனோகரன் (அப்பன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமாரி, சங்கீதா, மேரிஜீலியற், சிந்துரூபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸ்மன், லக்ஷா, லவன், கஸ்தூரி, கனிஸ்ரியா, ரரன்சியா, தமிழினி, தேசிகா, பானுஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

C10940(16/17)

தகவல் : குடும்பத்தினர்.
077 434 9269

### பரராஜசிங்கம் கனகபூபதி



பிறப்பு 02.08.1948 இறப்பு 09.08.2019

போக்காலை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த பரராஜசிங்கம் கனகபூபதி நேற்று (09.08.2019) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மூத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், மோகனதாஸ், மேகலா, காலஞ்சென்ற சுவேந்தினி மற்றும் கவிதா ஆகியோரின் அன்புத் தாயும், யமுனா, கோணேஸ்வரன், கோகுலதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், கிசோபன், பானுசன், லிஷாளி, விதேஷ், சஜேஸ் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், ராசபூபதி, தியாகலிங்கம், கணேசலிங்கம் மற்றும் ரத்தினபூபதி முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லமாணிக்கம், சறோஜினிதேவி, காலஞ்சென்ற தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


போக்காலை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(c 10937) (13)

தகவல்:
குடும்பத்தினர்.
ப.மோகனதாஸ் (மகன்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

தோற்றம் 17 . 10 . 1932



மறைவு 09 . 08 . 2019

### வேலுப்பிள்ளை தையலம்மை

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம், காளிகோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் 42, அராலி வீதி, ஓட்டுமடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தையலம்மை நேற்று (09.08.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகராணியின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, லெட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, அராலி வீதி,
ஓட்டுமடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 912 2656



## கூட்டமைப்பினர்....

கொழும்பு, ஓக.10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுக் காலை முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு விஜேராம வீதியில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் பங்கேற்றுள்ளனர்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டு வரும் நிலையிலும், சிறிலங்கா பொது மக்கள் முன்னணி தனது அரச தலைவர் வேட்பாளரை நாளை அறிவிக்கவுள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. (எ)

## 30 ஆங்கில...

கைக்கு அனுப்பவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்சுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, அமெரிக்க தூதரகத்துக்கும், கல்வி அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று விரைவில் கையெழுத்திடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## கோத்தாவை...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச நாளை அறிவிக்கப்படவுள்ளார். இதற்கு முன்னதாக, இந்தியாவுக்குச் சென்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கு கோத்தபாய முயற்சித்தார். அதற்காக நேரம் ஒதுக்குமாறும் கோத்தபாய கோரியிருந்தார். இருப்பினும், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, கோத்தபாயவைச் சந்திப்பதற்கு இன்னமும் நேரம் ஒதுக்கவில்லை என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## அடியார்களைச்...

படைத்தரப்பினர் கடும் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்துவது தமிழ் மக்கள் பேரவைக்கு மிகுந்த மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுவது வழமை. கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற இடரைக் காரணம்காட்டி நல்லூர் ஆலயச்சூழல் முழுவதிலும் படைத்தரப்பினர் குவிக்கப்பட்டு, ஆலயச் நுழைவாயில்களில் சோதனைச் சாவடிகளை அமைத்து பக்தர்களை கடும் உடற்சோதனைக்கு உட்படுத்துவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மன ஆறுதலுக்காகவும் ஆற்றுப்படுத்தலுக்காகவும் அமைதியான வழிபாட்டிற்காகவும் நல்லூர்க் கந்தனின் ஆலயத்துக்கு ஆசாரமாகச் செல்கின்ற அடியார்களைப் பொலிஸார் உடற்சோதனைக்கு உட்படுத்துவது அடியவர்களின் மனங்களை வேதனைப்படுத்துவதாக அமைகிறது. எனினும் இந்த உண்மை புரிந்துகொள்ளப்படவில்லை.

தேசிய பாதுகாப்புத்தான் காரணம் என்றால் நாடு முழுவதும் அனைத்து மக்களும் பாரபட்சமின்றி சோதனைக்குள்ளாக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லாமல் இடர் நிகழ்ந்த இடங்களைத் தவிர்த்து இடர் நிகழாத தமிழர் செறிந்து வாழும் வடக்குப் பகுதியில் மட்டும் பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரிப்பது என்ன நியாயம் எனப் புரியவில்லை.

அடியார்களை வரிசைப்படுத்தி, உடற்சோதனைக்கு உட்படுத்துகின்ற நடவடிக்கை தொடர்பில் மறுபரிசீலனை செய்யவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(த-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துக்கள்
### அகவை அறுபதில்
### அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.




**திரு. செல்லையா இராமநாதன் (SLPSI)**

**BA.Dip in Edu, DSM (2019.08.10)**

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/உடுத்துறை ம.வி | - 27.11.1989 - 31.03.1993 (ஆசிரியர்) |
| யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை | - 01.04.1993-31.12.1994 (ஆசிரியர்) |
| யா/ அம்பன் அ.மி.த.க பாடசாலை | - 01.01.1995-29.01.1997 (ஆசிரியர்) |
| யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி | - 01.03.1997-28.02.1999 (ஆசிரியர்) |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | - 01.03.1999-31.12.2000 (ஆசிரியர்) |
| யா/ புற்றாளை ம.வி | - 01.01.2001-31.09.2004 (ஆசிரியர்) |
| யா/ தொண்டைமானாறு வீ.ம.வி | - 01.10.2004- 04.01.2007 (ஆசிரியர்) |
| யா/ நல்லூர் இந்து த.பெ.பாடசாலை | - 05.01.2007 - 07.12.2009 (ஆசிரியர்) |
| | 07.12.2019 - 14.06.2010 (அதிபர்) |
| யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் | - 15.06.2010-29.03.2016(அதிபர்) |
| யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை | - 30.03.2016 - 10.08.2019 (அதிபர்) |

இன்று மணிவிழாகாணும் எமது பாடசாலை அதிபர் அவர்கள் தன் ஒய்வுக் காலத்தில் பல பேறுகளை பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2019

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை அமைப்பதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 10.08.2019 தொடக்கம் 16.08.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிவரை விநியோகிக்கப்படும். 16.08.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை படிவங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

(கேள்விப்படிவங்களை விடுமுறை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம்)

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை, நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

**கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.**

இம்மானுவல் ஆனல்ட்
மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

C/10939/15

## மரண அறிவித்தல்

### திருமதி கலைமதி திருச்செல்வம்



அளவெட்டியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைமதி திருச்செல்வம் நேற்று (09.08.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதத்தின் அன்புமகளும்காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பர்வததேவி ஆகியோரின் அன்பு மருமகளும் திருச்செல்வத்தின் (செல்வா) அன்பு மனைவியும் ஜெனதீபன் (யாழ். பல்கலைக் கழக மாணவன்), ஜனனி, நாவரசி (யா/ மகாஜனாக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ரவீந்திரன், கலைச்செல்வி, றமணன், கயல்விழி ஆகியோரின் அன்புச்சகோதரியும் வரதராசா (அமெரிக்கா), வனதராசா (கனடா), வனஜா, ஜீவராசா, கிரியா, அனுஷா ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2019) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேனிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**(செல்வா)**

## பல்டி...

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்த கோத்தபாய ராஜபக்ச தற்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து 'பல்டி' அடித்துள்ளார். இலங்கையில் அனைத்து மக்களின் வாக்குகளையும் எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனை, கடந்த செவ்வாய்க்கிழமை கோத்தபாய ராஜபக்ச சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பில் தமிழர்களின் ஆதரவு இன்றியே வெல்லுவேன் என்று கோத்தபாய ராஜபக்ச நம்புகின்றார் என்றும், அவர் பன்னாட்டு மதிப்புக்காக 3 லட்சம் தமிழ் வாக்குகளையும் குறி வைக்கின்றார் என்று உதயன் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் கோத்தபாய ராஜபக்ச ஊடகப் பிரிவால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சில அரசியல்வாதிகளுடன் சேர்ந்து போலியான செய்திகளைப் பரப்பும் ஊடகங்களை நம்பி ஏமாற வேண்டாம். அனைத்து தமிழ் மக்களின் ஆதரவும் தனக்குத் தேவை என்று கோத்தபாய கூறுகின்றார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தனுடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் பல்வேறு போலியான தகவல்கள் ஊடகங்களில் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'தமிழ் மக்களின் ஆதரவு தமக்கு தேவையில்லை' என்று கோத்தபாய ராஜபக்ச கூறியதாக பரவிவருகின்ற போலியான செய்திகளுக்கு கடும் கண்டனத்தை கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவரின் வெற்றிக்கு இலங்கை வாழ் அனைத்து தமிழர்கள், சிங்களவர்களின் வாக்குகளை அவர் எதிர்பார்க்கின்றார். உண்மையான விடயங்களை ஊடகங்களில் வெளியிடாமல் ஊடக தர்மத்துக்கு எதிராக செயற்படும் ஊடகங்களை மக்கள் நம்பி ஏமாற வேண்டாம் என்றும் கோத்தபாய தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு பலர் கோத்தபாய ராஜபக்சவைச் சந்தித்துப் பேசி வருகின்ற நிலையில், இவர் அரசியலில் வந்தால் நாட்டு மக்களுக்கு நல்லதை செய்துவிடுவார் என்ற பயத்திலும், தன்மேல் உள்ள தனிப்பட்ட பகையையும் கருத்தில் கொண்டு இவ்வாறு பொய்யான செய்திகளை நாட்டு மக்கள் மனதில் விதைத்திட முயற்சிப்பதாக தெரிவித்தார்.

என் மீதும் எம் நாடு மீதும் அன்பு கொண்டுள்ள மக்களை இவ்வாறான போலியான செய்திகளை பரப்புவதன் மூலம் திசைமாற்றி விட இயலாது என்றும், இவ்வாறான போலியான செய்திக்கு ஊடகங்களைத் துணைபோக வேண்டாம் என்று கோத்தபாய கேட்டுக் கொள்வதாக அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சித்தார்த்தனின் அறிக்கை

இதேவேளை - இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நான் ஒரு அரசியல் கட்சியின் தலைவராவேன். எமது மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக தென்னிலங்கை தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவது இயல்பான விடயமொன்று. தென்னிலங்கை தலைவர்களுடனான அணுகுமுறைகள் ஊடாகவே எமது மக்களின் பிரச்சினைகளை படிப்படியாக தீர்க்க முடியும் என்பது பொதுப்படையான விடயமாகும். அதனடிப்படையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய என்னை சந்திக்க வேண்டும் என்று கோரியிருந்தார். அந்தக் கோரிக்கைக்கு அமைவாகவும் அவர் அரசியலில் ஈடுபடவுள்ளதால் அவருடைய நிலைப்பாடுகள் பற்றி அறிவதற்கான ஒரு வாய்ப்பாகவும் அந்தச் சந்திப்பை பயன்படுத்த திட்டமிட்டு அதற்கான ஆமோதிப்பைச் செய்திருந்தேன்.

இந்தச் சந்திப்பின்போது, அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் முதலில் கவனம் செலுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உங்களுக்கு எதிரான மன நிலையுடன் இருக்கின்றார்கள். ஆகவே அவர்களின் ஆதரவு தங்களுக்கு கிடைப்பதற்கான சத்தியம் குறைவு என்று நேரடியாகவே கூறினேன். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவரிடத்தில் காணப்படும் திட்டங்கள் தொடர்பில் நான் வினவியிருந்தேன். அச்சமயத்தில், 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் தயாராக இருப்பதாக கூறினார். இருப்பினும் பொலிஸ் அதிகாரத்தை வரையறைக்குட்பட்டதாக வழங்க முடியும் என்றும் - காணி அதிகாரத்தை உடனடியாக வழங்குவதில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் கூறினார். பெரிய அபிவிருத்தி திட்டங்கள் வருகின்றபோது மாகாண சபையின் கீழ் காணி அதிகாரம் காணப்படுமாயின் அத்திட்டங்களை உடனடியாக முன்னெடுக்க முடியாது போகும் நிலமை ஏற்படும் என்றும் கடந்த காலத்தில் அவ்வாறான அனுபவங்கள் உள்ளதாகவும் கூறினார்.

மேலும், தென்னிலங்கை போன்று, வடக்கு - கிழக்கையும் சமச்சீராக கருதி பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை தான் முன்னெடுப்பேன் என்பதை உறுதியாக கூறிக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டதோடு, அரசியல் தீர்வு விடயங்கள் உள்ளிட்ட அரசியல் ரீதியான அனைத்தையும் மகிந்த ராஜபக்சவே கையாளவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து, அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அவரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தபோது, 12 ஆயிரம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை மறுவாழ்வுக்கு உட்படுத்தி எமது காலத்திலேயே விடுவித்துள்ளோம். ஆகவே எஞ்சியவர்களை விடுவிப்பதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை என்றும் கூறினார்.

இதனை விடவும் கடந்த தேர்தலில் எமது தரப்பு 75ஆயிரம் வாக்குகள் வடக்கில் கிடைத்திருக்கின்றபோதும் இம்முறை அந்த மக்கள் அனைவரும் எதிர்காலம் நோக்கி சிந்தித்து எமக்கு 2 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் கோத்தபாய குறிப்பிட்டார். அவ்வாறு தமிழ் மக்களின் ஆணையும் தனக்கு கிடைக்கின்றபோது சக்தியான ஆட்சியொன்றை முன்னெடுப்பதற்கு உந்துதல் அளிக்கும் என்றும் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வு உட்பட அனைத்து விடயங்களிலும் நாம் கூட்டமைப்பாகவே தீர்மானிப்போம். கூட்டமைப்பின் தலைவரே தீர்க்கமான தீர்மானங்களை அறிவிப்பார் என்பதே எமது தரப்பின் நிலைப்பாடு என்ற விடயத்தையும் நான் அவருக்கு சுட்டிக்காட்டியிருந்தேன். மேலும் கோத்தபாயவுடனான சந்திப்பில் இவ்விடயங்களே பேசப்பட்டுள்ள நிலையில் இவற்றுக்கு அப்பால் வெளியாகும் பல்வேறுவிதமான ஊடகத் தகவல்களில் எவ்விதமான உண்மையும் இல்லை - என்றார். (ஒ,5)

## புலிகளின்...

முதுகெலும்பை உடைத்த பின்னர் அமெரிக்காவில் இருந்து ஓடிவந்து போரை வெற்றி கொண்டதாக கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

'போரை வெற்றிகொள்ள முடியாது என்று தெரிந்தவுடன் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்காவுக்குச் சென்று ஒளிந்து கொண்டார். நாம் கருணா அம்மானை போன்றவர்களை அழைத்து, புலிகளை தோற்கடித்த பின்னரே அவர் நாட்டுக்கு ஓடி வந்தார்' - என்றார் கிரியெல்ல. (ஒ,5,31)

## நல்லூர்...

முன்வைக்கவில்லை. இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை மேயர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் பொலிஸாரால் உடற்சோதனைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பில் பல தரப்பிலும் கடுமையான விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டிலேயே பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் விமர்சனம் தொடர்பில் மேயர் ஆனோல்ட்டிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'நாங்கள் நல்லூர் ஆலய உற்சவ முன்னாய்த்த கூட்டத்துக்கு பொலிஸாருக்கு அழைப்பு விடுப்போம். அவர்கள் வழமைபோன்று கலந்து கொண்டார்கள். அதன் பின்னர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சிலர் எங்களுடன் தனியான சந்திப்பு நடத்தவேண்டும் என்று தெரிவித்தார்கள். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஆராய வேண்டும் என்று கூறிச் சந்திப்பை ஒழுங்கு செய்தனர்.

அந்தச் சந்திப்பில் அவர்களே, இந்தச் சோதனை நடவடிக்கை தொடர்பில் தெரிவித்தார்கள். நாங்கள் எதனையும் கோரவில்லை. நல்லூர் திருவிழா காலத்தில் வழமையாக 250 பொலிஸார் வரையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு நாங்கள் குடிதண்ணீர் போத்தல், தேநீர் வழங்குவோம். இந்த ஆண்டு 650 பேர் பாதுகாப்பில் ஈடுபடுவர் என்றும் அவர்களுக்கும் அவற்றை வழங்குமாறு பொலிஸார் கேட்டனர். அதற்கு அமைவாக அவர்களுக்கு அவற்றை வழங்குகின்றோம். அத்துடன் பொலிஸ் சோதனைச் சாவடிகளையும் எம்மை அமைத்து தருமாறு கேட்டனர். அதனையும் அமைத்து வழங்கியுள்ளோம். நாம் எந்தவொரு தரப்பினரிடமும் பாதுகாப்பு வழங்குமாறு கோரவில்லை. இது தொடர்பில் வெகு விரைவில் ஊடக அறிக்கை வெளியிடுவேன் - என்றார். (ஒ,5)

## கண்ணீர் அஞ்சலி



**சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள்**

(யா/ நாயன்மார்கட்டு இராசராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பிரதமகுரு)

எம்து ஆலயத்தில் பிரதம குருவாகவும், மஹோற்சவ குருவாகவும், அர்ச்சகராகவும் இருந்து வழி நடத்தியவர்.

அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு கவலை அடைகின்றோம்.

[illegible] பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது [illegible] தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இராச ராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலயம்.** (cs.27264) (13.) **பரிபாலனசபையினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# விரைவான செயற்பாடு அவசரமான அவசியம்

இந்தஆண்டுக்கானவாக்காளர்பட்டியல்மீளாய்வின்போது யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனங்களின்எண்ணிக்கைகுறைவதற்கானவாய்ப்புக்கள்அதிகரித்திருக்கின்றன. தற்போது 7 ஆசனங்களாக இருக்கும் அது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது 5ஆகக் குறைவதற்கு அதிகளவு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த பல வருடங்களாக வாக்காளர்பட்டியல் மீளாய்வு செய்யப்படவில்லை. இவை படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தமையால், அங்கு மக்கள் வாழவில்லை என்பதைக் காரணம்காட்டி வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்படாமலேயே இருந்தது. இதனால் 1987ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலே தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தது. அதேநேரம் வலி. வடக்கு மக்களில் கணிசமானோர் இடம்பெயர்ந்துதாம்வாழ்ந்தபகுதிகளிலும்தம்மைவாக்காளர்களாகப் பதிவுசெய்திருந்தனர். இதனால்யாழ்ப்பாணத்தில்உண்மையில் வசித்த வாக்காளர்களிலும் பார்க்க சற்றுக்கூடுதலான வாக்காளர் எண்ணிக்கை காட்டப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்து மக்கள் போர் அச்சம் காரணமாகப் புலம்பெயர்ந்து இந்தியாவிலும், ஐரோப்பிய அமெரிக்கநாடுகளிலும் பெரும்எண்ணிக்கையில்வாழநிர்ப்பந்திக்கப்பட்டிருக்கையில் அவர்களின் எண்ணிக்கையை, இந்த அதிகரித்த பதிவு சரியாகப் பிரதிபலிக்காதபோதும் சில ஆயிரம் வாக்குகளாவது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த நடைமுறையூடாக அதிகரித்துக் காட்டப்பட்டு வந்தது. ஆனால், இப்போது அதுவும்பறிபோகும்நிலைவந்துவிட்டது. வலி. வடக்கில்முழுமையாகவும் பகுதியளவாகவும் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பகுதிகளில் கூட வாக்காளர் பட்டியலை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அப்படி மீளாய்வு செய்யும்போது 30 ஆயிரம் வாக்காளர் பதிவுகள் நீக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது என்கிறார்கள் அதிகாரிகள். யாழ். மாவட்டத்தில்வாக்காளர்களின்சராசரி அதிகரிப்பு வருடம் ஒன்றுக்கு 5 ஆயிரம் மட்டுமே. எனவே சுமார் 25 ஆயிரம் வாக்காளர்கள்தற்போதையபட்டியலில்இருந்துநீக்கப்படுவார்கள் என்று எதிர்வுகூறப்படுகின்றது.


இந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றால் வெளிநாடுகளில் வாழும் வலி. வடக்கைச் சேர்ந்த, அந்தந்த நாட்டு குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளாத மக்களும் தம்மை இலங்கையில் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளவேண்டும். இதன் மூலம் வாக்காளர் எண்ணிக்கையின் வீழ்ச்சியை ஓரளவுக்குத்தடுக்க முடியும். வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே ஒவ்வொரு மாவட்டத்துக்குமான நாடாளுமன்ற உறுப்பினர்களின்எண்ணிக்கையும்தீர்மானிக்கப்படுகின்றது என்பதால், இந்த வாக்காளர் பதிவில் அரசியல்வாதிகளும் அக்கறை கொள்ள வேண்டியதுகட்டாயம். ஆனால், இங்குஅப்படி நடக்கவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் அனைவருக்கும் இது பற்றி அறிவித்துவிட்டபோதும், வெளிநாடுகளில் உள்ள வலி.வடக்கு வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கு எந்தவொரு அரசியல்வாதியும் ஊக்குவிப்பு வழங்கியதாகத் தெரியவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது ஒரு வருத்தப்படக்கூடிய நிலமை. அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் மெத்தனப் போக்கோடு இருக்காமல் விரைந்து செயற்படவேண்டும். அதுவே நாடாளுமன்றத்தில் தமிழர்களின் தலைவிதியைப் பாதுகாப்பதற்கு உதவும்.

தமிழ் வாக்காளர் எண்ணிக்கை குறையக் குறைய நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் குறையும், இது சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பெரிதும் சாதகமாக மாறிவிடும். எனவே இது விடயத்தில் தமிழர் அரசியல்வாதிகள் விரைந்து செயற்படுவது அவசியம்.

அத்தோடு இந்தியா போன்ற இடங்களில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளையும் இங்கு வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு தமிழ் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



# 'லடாக்' அரசியல்

காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அதிகாரத்தைப் பறித்ததோடு அல்லாமல், அதன் முழு மாநில அதிகாரத்தையும் பறித்து, ஜம்மு - காஷ்மீர் மற்றும் லடாக் என்று இரு பிராந்தியங்களாக அதை இரு கூறுகளாகப் பிரித்து, அவற்றை ஒன்றியப் பிரதேசமாகவும் அறிவித்திருக்கிறது புதுடெல்லி. இந்த முடிவு காஷ்மீரிலும் ஜம்முவிலும் லடாக்கிலும் ஒரே மாதிரியான உணர்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. குறிப்பாக, லடாக் மக்களில் பெரும்பான்மை மக்களிடம் ஆதரவு மனநிலை வெளிப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் சொல்கின்றன. அது எப்படி?

ஏனெனில், புவியியல், கலாசார ரீதியாகவே லடாக் தனித்துவமான நிறத்தைக் கொண்டது. மக்கள் தொகையில் 47.4 வீதமானோர் முஸ்லிம்கள் என்றால், கிட்டத்தட்ட அவர்களுக்கு இணையாக 45.8 வீதமானோர் பௌத்தர்கள். இந்துக்களின் எண்ணிக்கை குறைவு. வெறும் 6.2 வீதமே. எனினும், முஸ்லிம்களின் பெரும்பான்மைக்கு எதிராக இந்த இரு சமூகங்களும் இணைந்து செயற்படும் போக்கு உருவாகியிருப்பதால், பா.ஜ.க. ஆதரவு இங்கே மேலோங்கிவருகிறது.

**மலையடிவாரப் பிராந்தியம்**

காரகோரம் மலைத்தொடரில் உள்ள சியாச்சின் பனிச் சிகரத்திலிருந்து தெற்கிலுள்ள நெடும் இமயமலைத் தொடர்வரை பரந்து விரிந்து கிடக்கிறது லடாக். திபெத்திய வம்சாவளியினரான இந்தோஆரியர்கள் காலங்காலமாக வசிக்கும் பகுதி இது. மக்கள் நெருக்கம் அதிகம் இல்லாத பகுதி. இதன் கலாசாரமும் வரலாறும் திபெத்துடன் அதிகம் தொடர்புள்ளது. வரலாற்றின்படி இந்தப் பகுதியுடன் பல்திஸ்தான் பள்ளத்தாக்கும் சேர்ந்ததுதான். நாடு விடுதலை அடைந்தவுடன் பாகிஸ்தான் திடீரெனப் படையெடுத்து கில்ஜித், பல்திஸ்தான் பகுதிகளைத் தன்வசப்படுத்திக் கொண்டுவிட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீருக்கு அவை சென்றுவிட்டன. இந்த விடயம் தொடர்பில் லடாக்கில் வாழும் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பாகிஸ்தான் மீது கசப்பு உண்டு.

அடிப்படை வசதிகள் குறைந்த பிராந்தியம் லடாக். லெ நகரில் சிறு வானூர்தி நிலையம் உண்டு என்றாலும், ஆயிரத்து 800 கிமீ நீளத்துக்குத்தான் சாலையே இருக்கிறது. அதிலும் 800 கிலாமீற்றர் தார் சாலை. இந்தச் சாலையையும் இராணுவத்தின் அங்கமான எல்லைப்புற சாலை அமைப்பே.

**லடாக்கின் முக்கியத்துவம்**

லடாக்கின் மக்கள்தொகை வெறும் 2.74 லட்சம் மட்டுமே. எனினும், நிலப்பரப்பளவில் அது பெரியது: 59 ஆயிரத்து 196 சதுர கிமீ. சராசரியாக, ஒரு சதுர கிமீ பரப்பளவுக்கு 4 பேர்தான் வசிக்கின்றனர். இரண்டு மாவட்டங்கள். லெ மற்றும் கார்கில். தலைநகராக லெ அமைந்திருக்கிறது. லடாக்கி, புர்கி, ஷினா, திபெத்தி, இந்தி, பல்தி, உருது ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன.

லடாக் என்பது உண்மையில் உயரமான பீடபூமியாகும். இதில் சிந்து நதியின் மேல் பகுதி பள்ளத்தாக்கும் அடங்கும். லடாக்கின் வளமைக்குக் காரணம் சிந்து நதிதான். ஷே, லெ, பாஸ்கோ, டிங்மோஸ்காங் என்ற சிறு நகரங்கள் இதன் கரையிலேயே அமைந்துள்ளன. இந்தியாவில் சிந்து பாயும் பிரதேசம் இது மட்டுமே.

லடாக் பகுதியில் மிக உயரமான மலைச் சிகரங்கள் இல்லை. இமயமலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் இருப்பதால், இது பாலைவனப் பகுதியாகவும் இருக்கிறது. குளிர் காலத்தில் விழும் பனிதான் இங்கு நீராதாரம். இங்கு பயிர்பச்சை அபூர்வம். தண்ணீர் ஓடும் ஓடைகளுக்கு அருகில் மட்டுமே தாவரங்கள் காணப்படுகின்றன.

லடாக் மக்களை இந்திய அரசுக்கு இணக்கமாகச் சிந்திக்கவைத்ததில் பாகிஸ்தானுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு. இந்தியா சுதந்திரம் அடைந்த வேகத்தில் தாக்குதலை முன்னெடுத்த பாகிஸ்தான் படைகள், லடாக் வரை வந்தன.

அங்கு தொடங்கி கார்கில் ஆக்கிரமிப்பு வரை பாகிஸ்தான் முன்னேறும்போதெல்லாம் இரு நாட்டுப் படைகளின் விளைவாகப் பதற்றத்தைச் சந்திக்கும் லடாக் மக்கள், இயல்பாக பாகிஸ்தான் எதிர் மனநிலைக்கு ஆளாகிவந்தனர். காஷ்மீர் சமூகத்துக்கு நேரெதிராகப் பெண்கள் செல்வாக்கு செலுத்தும் சமூகம் லடாக்கியர்களுடையது. ஆண்களுக்கு இணையாக பலதாரக் கலாசாரம் பெண்கள் மத்தியிலும் உண்டு.

**வணிகக் கணக்குகள்**

லடாக்கை முன்வைத்துப் பல வியாபாரக் கணக்குகள் இந்திய அரசுக்கும் பெருநிறுவனங்களுக்கும் இருக்கின்றன. முக்கியமானது எரிசக்தி உற்பத்தி. சிந்து நதி பாயும் இடங்களில் நீர்வீச்சு அதிகம். இதனால் நீர் மின்சார உற்பத்தியைப் பெரிய அளவில் அதிகரிக்க முடியும். லடாக் பகுதியில் காற்றின் வேகம் பல மாதங்களுக்கு அதிகம். ஆகையால், காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிக்கமுடியும். உயரமான பாலைவனப் பகுதியையும் உள்ளடக்கியது என்பதால், சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கவும் நிறைய வாய்ப்புக்கள் உள்ளன.

நிலத்தை வெளியார் குத்தகைக்குக்கூட இங்கே எடுக்க முடியாது என்பதால், வெளி மாநிலங்களைச் சார்ந்த பெருநிறுவனங்கள் இங்கே கால் பதிக்க முடியாத நிலை இருந்தது. இனி, அவர்கள் அங்கே கால் பதிப்பர். இப்போதைய அரசின் முடிவுக்குப் பின்னணியில் இந்த வணிகக் கணக்குகளும் இருக்கின்றன. எல்லாமும் கூடித்தான் கலவையான எதிர்வினைகளை லடாக்கில் உருவாக்கியிருக்கின்றன!

நன்றி: இந்து தமிழ் திசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா - இலங்கை உடன்படிக்கை பிராந்தியத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும்

### எச்சரிக்கிறார் மகிந்த அணி உறுப்பினர்

கொழும்பு, ஓக. 10

அமெரிக்காவுடன் இலங்கை அரசு செய்துகொள்ளும் இராணுவ உடன்படிக்கை மூலமாக இலங்கையை அச்சுறுத்தல் பிரதேசமாக மாற்றி, இந்து சமுத்திரத்தில் குழப்பங்களை ஏற்படுத்தவும் நட்புறவு நாடுகளுடன் பகையை வளர்க்கவுமே அரசு முயற்சிகளை எடுக்கின்றதாக எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்புத் தீர்மானம் மீது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு மக்கள் ஏற்காத பன்னாட்டு உடன்படிக்கைகளை செய்து வருவதுடன் தாம் செய்துவரும் உடன்படிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும் தெரிவிக்க தலைமை அமைச்சர் உள்ளிட்ட அரசு மறுத்து வருவதுடன் 'எட்கா' மற்றும் 'சோபா' உடன்படிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதாக வாக்குறுதிகளைக் கொடுத்தும் இன்றுவரை அதனை செய்ய முடியாது இருக்கின்றமை, மிலேனியம் கோப்பரேசன் நிறுவன உடன்படிக்கை பெரிய நெருக்கடி என்பதை தெரிந்தும் அது குறித்து இரகசியமாக உடன்படிக்கை செய்து வருகின்றமை என்பவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்து சமுத்திரத்தின் பலத்தை உருவாக்குவதே எமது வெளிநாட்டுக் கொள்கையாகும். இதில் எந்தவித இராணுவ நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியாது. இந்து சமுத்திர நாடுகள் அனைத்துமே இந்த உடன்படிக்கைக்கு இணங்க வேண்டும் என்ற தீர்மானம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. இலங்கை போர் உடன்படிக்கையை கைச்சாத்திட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்காவுடன் இந்த உடன்படிக்கை செய்து கொள்வதால் ஏனைய நாடுகளுடன் நாம் பகையை உருவாக்கும் வகையில் அமையும்.

அமெரிக்கா முதலீடுகள் எமக்கு அதிகமாக கிடைக்கின்றது என்பது மறுக்க முடியாது. ஆனால் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்துகொள்ளக்கூடாது. அவ்வாறு செய்துகொண்டால் இலங்கைக்கு பெரிய அச்சுறுத்தல் நிலைமைகள் உருவாகும். இந்தியாவுடன் இலங்கை செய்துகொண்ட உடன்படிக்கையைப் பார்த்தால் இரு நாடுகளும் நட்புறவை பலப்படுத்துவதும் வர்த்தக நட்புறவை கையாள்வதாக இருந்தாலும் இராணுவ நகர்வுகள் இருக்காது என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எந்தவொரு இராணுவ நகர்வுகளுக்கான உடன்படிக்கையும் செய்துகொள்ளக்கூடாது என்று தெளிவாகக் கூறியுள்ள நிலையில் நாம் அண்மைய நாடுகளுடன் கூட அவ்வாறு செய்து கொள்ளாத நிலையில் இப்போது அமெரிக்காவுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் பெரிய நெருக்கடிகளை உருவாக்கும் - என்றார்.

(ஓ.5.31)

## அடுத்த அரச தலைவர் தேர்தலில் அமெரிக்கவாதி யார்? சீனவாதி யார்?

### மக்கள் அடையாளம் காணவேண்டும் என்கிறார் விஜயதாச ராஜபக்ச

கொழும்பு, ஓக. 10

அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்துகொண்டு நாட்டை நாசமாக்கி வருகின்ற நிலையில் அடுத்து நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தலின் பிரதான இரண்டு வேட்பாளர்களில் அமெரிக்கவாதி யார்? சீனா வாதி யார்? என்பதை மக்கள் தெரிந்து தீர்மானம் எடுக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புத் தீர்மானம் மீது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கு தேர்தலைக் கோரி நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலமை உள்ளது. 19 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அதனை விட ஆணைக்குழுக்களின் தவறான நடத்தைகளும் அதிகார தலையீடுகளும் இவற்றை எல்லாம் தடுக்கின்றன.

13 ஆம் திருத்தத்தை கொண்டுபொலிஸ் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கொண்டுவரப்பட்ட ஆணைக்குழு மக்களுக்கு பாதுகாப்பை கொடுத்ததா? இந்திய புலனாய்வு கூறியும், இங்கு அதிகாரிகளும் கூறியும் பொலிஸ் ஆணைக்குழு செயற்பட்டதா?

தேர்தல்கள் ஆணைக்குழு மாற்றப்பட்டு ஜனநாயக ரீதியில் நியமிக்கப்பட்டது. ஆனால் நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்து நாட்டில் தேர்தல் இல்லை. இவ்வாறான செயற்பாடுகள் பலவீனம் இல்லையா? இவை குறித்து நாம் பேசக் கூடாதா? எந்த ஆட்சியில், எந்தத் தரப்பில், இருந்தாலும் அரசு செய்யும் தவறுகளை விமர்சிக்க வேண்டும். சுட்டிக்காட்ட வேண்டும். அதனை தடுக்க முடியாது. வெளிநாட்டு உடன்படிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

அம்பாந்தோட்டை உடன்படிக்கையை செய்தபோது நான் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தேன். இது குறித்து விவாதம் நடத்த இரண்டு நாள்கள் இருக்கையில் சபையில் அனைவரதும் மேசைகளில் சீனா வழங்கிய கணினி பொருத்தப்பட்டது. இதை நான் உதவியாக பார்க்கவில்லை. இலஞ்சமாகவே கருதினேன். கையூட்டல்களை கொடுத்து நாட்டைக் கூறுபோட இடமளிக்க முடியாது. ஆயுதங்களுக்கு இல்லாத பலம் இன்று டொலருக்கு உள்ளது. இவ்வாறான நிலையில் சிறிய நாடான நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

(ஓ.5.31)

## அமெ. கொடுக்கும் சலுகைகளை இந்தியாவும் சீனாவும் கேட்டால் என்ன செய்வது?

கொழும்பு, ஓக. 10

பாதுகாப்பு உடன்படிக்கை மூலம் அமெரிக்காவுக்கு கொடுக்கும் சலுகைகளை இந்தியாவும் சீனாவும் கேட்டால் என்ன செய்வது? அமெரிக்காவுக்கு இந்தச் சலுகை கொடுத்தால் சீனா போன்ற நாடுகளின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும். இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்தன சபையில் தெரிவித்தார்.

இலங்கை அரசு வெளிநாடுகளுடன் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தங்களை சபைக்கு சமர்ப்பிக்க கோரி எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்தன கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு தீர்மானம் மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவை எதிர்க்கும் எதிர்க்கட்சி அல்ல நாம். போரை நிறுத்த அமெரிக்கா எமக்கு பல உதவிகளை செய்துள்ளது. அதேபோல் இந்தியா போன்ற நாடுகளின் உதவிகளையும் நாம் பெற்றுள்ளோம். இதற்கான உடன்படிக்கைகளும் செய்துள்ளோம். ஆனால் இரகசியமாக செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் குறித்தே எமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றோம்.

மேற்குலக நாடுகளின் போர்ப் பூமியாக எமது நாட்டை மாற்றுவதென்றால் அதற்கு இடம்கொடுப்பதா என்பதே எமது கேள்வி.

இங்கு செயற்படும் அமெரிக்க அலுவலகங்கள் வரி இல்லாது செயற்படவும், அமெரிக்க வாகனங்கள் இராணுவ வாகனங்கள் எதனையும் இலங்கை வாகன சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்த முடியாது எனவும், அமெரிக்காவில் இருந்து வரும் எந்த கொள்கலன்கள், கப்பல்கள், வாகனங்கள் எதுவும் ஆயத் திணைக்களத்தால் கண்காணிக்கப் படக்கூடாது. அமெரிக்க வானூர்திகள் தடைகள் இன்றி பறக்க முடியும் என்ற பல சலுகைகள் கேட்கப்பட்டுள்ளன. அமெரிக்காவுக்கு இந்தச் சலுகை கொடுத்தால் சீனா போன்ற நாடுகளின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும். ஆகவே இதனை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த உடன்படிக்கையை ஏற்றுகொள்ள முடியாது. அவர்களின் கோரிக்கை மிகவும் பாரதூரமானது. இவற்றை அவர்கள் கேட்கும் அதே நிலைப்பாட்டில் கொடுக்க முடியாது. எமக்கு இதில் எந்த வாய்ப்புகளும் இல்லை. அமெரிக்காவில் இருந்து வெறும் ஒரு சொற்ப நிதிக்காக நாட்டை நாசமாக்கிவிடக்கூடாது - என்றார்.

(ஓ.5.31)

## ஷாபி விவகாரத்தை கையாளும் சி.ஐ.டியினருக்கு அச்சுறுத்தல்

### மருத்துவமனைப் பணிப்பாளரை கைது செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஓக. 10

குருநாகல் மருத்துவமனையின் பிரவச சிகிச்சைப் பிரிவின் மருத்துவர் ஷாபிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எஸ்.திஸேராவுக்கு குருநாகல் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சந்தனகெந்தகமுவேவால் உயிர் அச்சுறுத்தல் நிலவுவதாக குருநாகல் பிரதான நீதிவான் சம்பந ஹேவாவசமிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிக்கை ஊடாக அறிவித்தது.

இது தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திஸேரா மன்றில் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் 26ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவின் சார்ஜன் ராஜபக்ச நீதிமன்ற உத்தரவைக் கையளிப்பதற்காக குருநாகல் மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவமனைப் பணிப்பாளர் அங்கு இருக்கவில்லை. பிரதிப் பணிப்பாளரே இருந்தார். பிரதிப் பணிப்பாளர் சந்தன கெந்தகமுவவிடம் மருத்துவ நிபுணர்கள் மூவரை விசாரணை செய்வதற்கான நீதிமன்ற உத்தரவை சார்ஜன் ராஜபக்ச கையளித்துள்ளார். இதன்போது சார்ஜனிடம், பிரதிப் பணிப்பாளர், நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஷாபியை ஒருவாறு விடுதலை செய்து விட்டீர்கள். அதற்கான இறுதித் துரும்பையும் பயன்படுத்திவிட்டீர்கள். இன்னும் 10 ஆண்டுகளில் சிங்கள இனமே அழிந்து விடும், என்று கூறியுள்ளார். இதற்குப் பதிலளித்துள்ள சார்ஜன் ராஜபக்ச விசாரணைகளில் வெளிப்படுத்தப்படும் சாட்சிகளுக்கு அமையவே நாம் செயற்பட்டோம் - என்றார்.

அதற்கு பிரதிப் பணிப்பாளர், உங்களுடைய மேலதிகாரி திஸேராவின் வீடு நுகேகொடையில் தானே உள்ளது. அண்மையில் அவரது வீட்டில் பெரிய தான நிகழ்வொன்று நடைபெற்றதல்லவா? உங்கள் திஸேரா பணம் செலவளிக்க கஞ்சப்படுபவர், என்று கூறியுள்ளார். இந்தக் கூற்றானது மிகத் தெளிவாக விசாரணை அதிகாரியான எனக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது. பிரதிப் பணிப்பாளர் சந்தன எதற்காக விசார்ணை யாளர்களான என்னைப் பற்றித் தேட வேண்டும். எனது வீடு நுகேகொடையில் உள்ளது என்பது எனது இள நிலை அதிகாரிகளுக்கு கூட தெரியாது. அப்படி இருக்கையில் இவர்கள் எதற்காக என்னைபின்தொடர வேண்டும். மருத்துவர் அவரின் தொழிலை செய்ய வேண்டும். விசாரணை யாளர்களை பின்தொடர்ந்து அவர்களைப் பற்றி தகவல் சேகரிப்பது குற்றவாளிகளின் செயற்பாடாகும். என்னைப்பற்றி தேடுவதன் பின்னணி என்ன? இதனை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளோம். அவர் ஊடாக விசாரணை தொடர்கின்றது - என்றார்.

இந்த விவகாரம் தொடர்பில் சந்தேகநபரான மருத்துவர் ஷாபி சார்பில் மன்றில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி நவரத்ன பண்டார, விசாரணையாளர்களுக்கு எந்த வகையிலேனும் அச்சுறுத்தல் விடுப்பதை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது. இது பெரிய அச்சுறுத்தல். பிரதிப் பணிப்பாளர் சந்தன கெந்தகமுவவை உடனடியாக கைது செய்து மன்றில் முற்படுத்த உத்தரவிடவேண்டும் - என்றார். இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க நீதிவான் ஆலோசனை வழங்கினார். (ஒ.5.71)

## கைதான யாழ்.பல்கலை மாணவர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்கள் 7 பேர், மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2ஆம் மற்றும் 3ஆம் வருட மாணவர்களுக்கு இடையில் கடந்த புதன்கிழமை பல்கலைக் கழக வளாகத்துக்கு வெளியில் கைகலப்பு ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாயிலில் இராணுவத்தினர் கடமையில் இருந்த நிலையில் இந்த மோதல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், இந்த மோதலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 7 சிங்கள மாணவர்களை கைது செய்தனர். அவர்கள் 7 பேரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். மாணவர்கள் மீதான குற்றச்சாட்டை ஆராய்ந்த நீதிவான், அவர்கள் 7 பேரையும் பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தார். (ஒ.5.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதியோர் செயற்றிறன் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 10
முதியோரின் செயற்றிறன்களை விருத்திசெய்யும் நோக்கில் முதியோர் செயற்திறன்போட்டி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் சிறந்த பாடகர், சிறந்த கலைஞர், சிறந்த சுயதொழில் முயற்சியாளர் ஆகியோரையும், சிறந்த பகல்நேர பராமரிப்பு நிலையம், சிறந்த பிரதேச மட்ட முதியோர் அமைப்பு ஆகியவற்றையும் தெரிவு செய்யும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-7)

## நவரத்தினத்துக்கு சாவகச்சேரியில் அமைகிறது சிலை

சாவகச்சேரி, ஓக. 10
சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினத்துக்கு சாவகச்சேரி நகரப் பகுதியில் சிலை அமைப்பதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி நகர சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.
நவரத்தினம் சாவகச்சேரி தொகுதியில் 25 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கனடா நாட்டுக்குச் சென்று அங்கு காலமானார். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் நகரசபையின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் செய்த சேவைகளை மதிப்பளிக்கும் வகையில் அவருக்கு சிலை நிறுவ நகரசபையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## வர்த்தக நிலையம் மீது பெற்றோல் குண்டுவீச்சு!

*பொலிஸில் முறைப்பாடு*

சாவகச்சேரி, ஓக. 10
பெற்றோல் குண்டு வீசப்பட்டதில் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பராகியது என்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு கைதடி நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
குறித்த பகுதியில் கனகலிங்கம் திவாகரன் என்பவர் நடத்தி வந்த வர்த்தக நிலையத்தின் மீதே மேற்படி பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது. இதனால் வர்த்தக நிலையத்தில் இருந்த வியாபாரப் பொருள்கள், பணம் உள்ளிட்ட சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து சாம்பராகின எனத் தெரிவிக்கப்பட்டது. அன்றையதினம் இரவு மீசாலை மடத்தடிப் பகுதியில் இரு வர்த்தக நிலையங்கள் எரிந்து சாம்பராகியமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வடக்கில் தும்புத் தொழிற்சாலைகள் இன்று திறந்து வைக்கப்படுகின்றன

**யாழ்ப்பாணம், ஓக. 10**
**வடக்கின் தும்பு தொழிற்சாலைகள் இன்று சம்பிரதாய பூர்வமாக அமைச்சரால் திறந்து வைக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணப் பிராந்திய தென்னைப் பயிர்செய்கை சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கில் சுமார் 2 ஆயிரத்து 600 ஏக்கரில் தென்னைச் செய்கை நடைபெற்று வருகிறது. இதில் 95 மில்லியன் தேங்காய்கள் கடந்த வருடம் பறிக்கப்பட்டுள்ளன.
இதனால் தென்னையுடன் தொடர்புடைய சிறு கைத்தொழில் தொழிற்சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.
இதன்படி தும்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அதில் பயிற்சிகளும் நிறைவு பெற்றுள்ளன. தும்பு சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் பயனாளிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.
இன்று வடக்குக்கு வருகை தரும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் நவீன் திஸநாயக்க நவீன மயப்படுத்தப்பட்ட தும்புத் தொழிற்சாலைகளை திறந்து வைக்கவுள்ளார்.
முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளே அவ்வாறு கையளிக்கப்படவுள்ளன. (ம-7)



## *யாழ்ப்பாணத்தில் இதுவரை* 900 மெ.தொன் உருளைக் கிழங்கு விதை மானியத்துக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாண மாவட்டத்தில் 900 மெற்றிக்தொன் உருளைக் கிழங்குக்கு விதை மானியம் கோரி இதுவரை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 180 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்ட நிலையில், இதுவொரு முன்னேற்றகரமான நடவடிக்கை என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் கந்தையா தியாகலிங்கம்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 ஆயிரம் பரப்பு நிலத்தில் உருளைக் கிழங்கை செய்கை பண்ண விவசாயிகள் ஆர்வமாக இருந்தனர். இதற்காகப் பதிவுகள் மேற்கொண்ட சமயம் 225 மெற்றிக் தொன் தேவை எனக் கண்டறியப்பட்டு அதற்கான கோரிக்கைகள் விடப்பட்டன. இருப்பினும் அந்த நேரம் எமக்கு 180 தொன் விதை உருளைக் கிழங்கு மட்டுமே கிடைத்தது. இதனால் சுமார் 4 ஆயிரத்து 250 பரப்பு அளவிலேயே மாவட்ட ரீதியில் செய்கை செய்யப்பட்டது.
இந்த நிலையில் இந்த ஆண்டு 900 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு வரையில் விதை மானியம் கோரப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட 900 கிலோ விதை உருளைக் கிழங்கும் கிடைக்குமாக இருந்தால் குடாநாட்டில் மட்டும் 21 ஆயிரம் பரப்பு நிலத்தில் கிழங்கு பயிரிப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு - என்றார். (ம-105)

## நல்லூரில் அர்ச்சனைத் தட்டு பிளாஸ்ரிக்கில் இருத்தலாகாது

*மாநகர சபை கண்டிப்பான பணிப்பு*

யாழ்ப்பாணம், ஓக.10
நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள வர்த்தக நிலையங்களில் பனை ஓலையில் தயாரிக்கப்பட்ட அர்ச்சனைத் தட்டுக்களில் வைத்தே அர்ச்சனைப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என்று மாநகர சபை அறிவுறுத்தி வருகின்றது.
வர்த்தக நிலையங்களில் பிளாஸ்ரிக்கினாலான அர்ச்சனைத் தட்டுக்களில் வைத்து அர்ச்சனைப் பொருள்கள் விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.
மாநகர சபையால் இதற்கு என்று நியமிக்கப்பட்ட அலுவலர்களால் வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது.
பிளாஸ்ரிக்கிலான அர்ச்சனைத் தட்டுக்களில் வைத்து அர்ச்சனைப் பொருள்கள் விற்பனை செய்தால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர சபை தெரிவித்தது. (து-17)

## நல்லூர்ச் சூழலில் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஓக.10
நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு கூட்டுறவு உள்ளூர் உற்பத்தியாளர் விற்பனை நிலையம் ஒன்று ஆலயச் சுற்றாடலில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
ஆலயத்துக்கு முன்பாகப் பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையத்துக்கு அருகில் இந்த உள்ளூர் உற்பத்தியாளர் விற்பனைக் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.
திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த உள்ளூர் உற்பத்தியாளர் விற்பனைக் கூடம் திறந்து வைக்கப்பட்டது என்று வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்தது.
இதில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்கள் யாவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
அத்துடன் சித்த ஆயுள்வேத கூட்டுறவுச் சங்கத்தின் மருந்துப் பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன.
இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கவும் சந்தைப்படுத்தவும் முகமாக இந்த சிறப்புக் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-17)

# வவுனியாவில் கடும் காற்று 6 வீடுகள் சேதமடைந்தன

*18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்*





வவுனியா, ஓக.10
வவுனியாவில் நேற்று மதியம் திடீரென்று வீசிய கடும் காற்றால் 6 வீடுகள் சேதமடைந்துள்ளன. 18 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
வவுனியாவின் பல பகுதிகளிலும் நேற்று மதியம் திடீரென்று கடும்காற்று வீசியது.
இதனால் வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆண்டியா புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீடும், அங்கிருந்த நால்வரும், பெரிய புளியங்குளத்தில் ஒரு வீடும் அங்கிருந்த 2பேரும், முதலியார் குளத்தில் 2 வீடுகளும் அவற்றில் இருந்த 8 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.
வவுனியா வடக்கு மன்னகுளத்தில் ஒரு வீடும் அங்கிருந்த 3பேரும், நெடுங்கேணி வடக்கில் ஒரு வீடும் அதிலிருந்த ஒருவரும் என்று 6 வீடுகளும், அவற்றில் குடியிருந்த18 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.
குறித்த வீடுகளின் கூரைப் பகுதிகள் காற்றால் தூக்கி வீசப்பட்டு பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
அத்துடன், பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. ஏ-9 வீதி தேக்கவத்தையில் மரம் முறிந்து வீழ்ந்து மகிழுந்து ஒன்று சேதமடைந்துள்ளது என்றுமேலும் தெரிவிக்கப்பட்டது. (து)

## காற்றுடன் கூடிய காலநிலையால் குடாநாட்டில் பெரும் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவும் காற்றுடன் கூடிய காலநிலையால் பல பகுதிகளிலும் சேதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக நின்ற பெரிய வாகை மரம் ஒன்று முறிந்தமையினால் கல்லூரி வளாகத்துக்குள் இருந்த கட்டடத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. குடாநாட்டின் பல பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளும் காற்றினால் முறிவடைந்து சேதமடைந்துள்ளது. (ம-105)

## வாழைப் பழத்தின் விலை முன்னரைவிட அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.10
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை முன்னரைவிடச் சடுதியாக அதிகரித்துள்ளது. கதலி மற்றும் இதரை வாழைப் பழங்களின் விலையே இவ்வாறு அதிகரித்துள்ளன.
நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் ஆலயங்களின் வருடாந்தத் திருவிழாக்கள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன. இன்னும் பல ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகவுள்ளன.
இதுமட்டுமன்றி வறட்சியால் வாழைப்பழத்தின் நுகர்வும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனாலும் வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்றும் வாழைச்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.
தற்போது வறட்சியான காலப்பகுதி என்பதால் வாழை மரங்கள் அதிகமாகப் பாதிப்படைந்துள்ளன. இதுவும் விலை அதிகரிப்புக்கு மற்றொரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.
இதில் வறட்சியும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதைவிட தற்போது காற்று வீசுவது திடீரென்று அதிகரித்துள்ளது. அதனால் பல வாழைகள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் சிறந்த உற்பத்தியைப் பெறமுடியவில்லை. பழங்கள் கவர்ச்சிகரமாக இல்லை. உருப்பெருத்த பழங்கள் குறிப்பிட்டளவில் உள்ளன. எனினும் அவை சந்தைக்கு வந்தவுடன் விற்றுத் தீர்ந்துவிடுமளவுக்கு நிலமை காணப்படுகின்றது.
நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தைக்குப் போதியளவு வாழைக்குலைகள் வந்து சேர்ந்தாலும் அவை உடனடியாக விற்றுத் தீர்ந்து விடுகின்றன.
திருநெல்வேலி, மருதனார் மடம், சுன்னாகம் போன்ற சந்தைகளுக்கும் வாழைக் குலைகள் அதிகளவில் வந்து சேர்கின்றன. நேற்றைய சந்தை நிலவரப்படி கதலி வாழைப்பழம் கிலோ 60 ரூபாவாகவும் இதரை வாழைப்பழம் கிலோ 80 ரூபாவாகவும் விற்கப்பட்டன. (து-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடியில் எதிர்வரும் ஞாயிறன்று போதைக்கு எதிரான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக. 10

போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது. கழகத் தலைவர் க.சிறிதரன் தலைமையில் இந்த நிகழ்வு காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறும்.

தலைமை விருந்தினராக கனடா தமிழ் பல்கலைக்கழகத்தின் தலைவர் வி.சு. கருணாநிதி கலந்துகொள்ளவுள்ளார். விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையில் தலைமை முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் சி.நிசாகரன், கழகத்தின் உபதலைவர் லயன் சீமாட்டி திருமதி ம.நிர்மலா, நவீல்ட் பாடசாலையின் மூத்த உதவி ஆசிரியர் டினேஸ் அன்ரனி, நிகழ்வின் நிதி அனுசரணையாளர் திருமதி சிவா சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுக் கருத்துக்களை கொடிகாமத்திலுள்ள சமூகநல மருத்துவ கிராமிய சித்த மருத்துவமனையின் மருத்துவ கலாநிதி திருமதி தனுராஜ் ஜெனி, எஸ்.பி.தனுராஜ் ஆகியோர் வழங்கவுள்ளனர். குழுநிலை ஆய்வும் இடம்பெறவுள்ளது. (ம)

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின்

# விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஓக.10

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்டுவரும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் கட்டட வேலைகளைப் முழுமை செய்ய கொழும்பு சுகாதார அமைச்சு நாற்பது மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.**

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கட்டம் கட்டமாக நிதி வழங்கப்பட்டதால் மூன்று கட்டங்களாக மேற்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டு முதல் கட்டத்தில் (2016)கட்டட வேலைகளும் இரண்டாம் கட்டத்தில் (2017) கட்டட உள்ளக மின்னிணைப்பு மற்றும் தண்ணீர்க் குழாய்கள் பொருத்தும் பணிகளும், மூன்றாம் கட்டத்தில் (2018) கட்டடத்தில் செயற்படும் பிரிவுகளுக்கான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டத்தில் 30 மில்லியன் ரூபாவும் இரண்டாம் கட்டத்தில் 30 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் நிதி வழங்கப்படாதிருந்த நிலையில், தற்போது மின்தூக்கியுடன் ஏனைய வேலைகள் மேற்கொள்ள 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சிப் பகுதி மற்றும் ஏ -9 முதன்மைவீதி ஏ 32 நாவற்குழி கேரதீவு வீதி என்பவற்றில் இடம்பெறும் விபத்துக்களால் பாதிக்கப்படுவோரின் நலன்கருதி விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும் நிதி வழங்குவதில் ஏற்பட்ட இழுபறி காரணமாக இன்னமும் வேலைகள் முழுமை செய்யப்படவில்லை.

விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படும் நோயாளர்கள் நோயாளர் காவு வண்டி மூலமாக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த வருடம் மருத்துவமனையில் அமைக்கப்பட்ட குருதி சுத்திகரிப்புப் பிரிவு திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டபோது விரைவில் நிதி ஒதுக்கீடு செய்து டிசெம்பர் மாதத்துக்குள் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தவருடமே நிதிவழங்கப்பட்டுள்ளது. (த-9)



### ஒரேநாள் ஒரே கலைஞர் இரண்டு அரங்கேற்றங்கள்!

கொடிகாமம், ஓக. 10

லண்டனில் வாய்ப்பாட்டு, மிருதங்கம் கற்ற ஞானலிங்கம் தர்சனின் அரங்கேற்ற நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கிருபாசக்தி கருணா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு மற்றும் உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் வாய்ப்பாட்டு அரங்கேற்றமும் அதனைத் தொடர்ந்து மிருதங்க அரங்கேற்றமும் இடம்பெற்றன. அரங்கேற்றங்கள் தொடர்பான மதிப்பீட்டுரையை வடமாகாண அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா வழங்கினார். ஞானலிங்கம் தர்ஷன் லண்டனில் தயாளினி ஸ்கந்தமூர்த்தியிடம் வாய்ப்பாட்டையும் நாதமணி மு.சிவராஜாவிடம் மிருதங்கம் இசைப்பதற்கும் கற்று யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றம் மேற்கொண்டுள்ளார்.

அரங்கேற்ற நிகழ்வின் போது குரலிசை இசைமாணி த.றொபேட், வயலின் இசைக்கலைமாணி சு.கோபிதாஸ், மிருதங்கம் மற்றும் கடம் கலாவித்தகர் கு.ரவிசங்கர், கெஞ்சிரா - கலைமாணி நா.சிவசுந்தர சர்மா, முகர்சிங் சி.செந்தூரன், தம்புரா - க.ரஜீவன் மற்றும் ப.சந்தானலஷ்மி ஆகியோர் பங்குகொண்டனர். அரங்கேற்றம் செய்த கலைஞரின் மிருதங்க ஆசிரியர் மு.சிவராஜாவும் பங்கேற்றியிருந்தார். (ம-159)

## ஈருருளி அன்பளிப்பு

முள்ளியவளைப் பகுதியில் வசித்து வரும் பெண் தலைமைக் குடும்பத்தில் உயர் தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவிக்கு ஈருருளி வழங்கப்பட்டது. முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் இறுதிப் போரின்போது தந்தையையும் சகோதரனையும் இழந்து 'தாயின் அரவணைப்பில் தற்போது உயர் தரத்தில் கல்வி கற்கிறார்.

புலம் பெயர்ந்து கனடாவில் வசித்துவரும் தாயக உறவான மயூரன் ஜெயந்திமாலாவின் மகள் அஜிரினியின் பிறந்த தின அன்பளிப்பாக தமிழ் விருட்சம்' அமைப்பு ஊடாக இது வழங்கப்பட்டது. (த)





### வவுனியா புதூர்ப் பகுதியில்

# மணல் அள்ளுவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக. 10

வவுனியா புதூர் புதுவிளாங்குளம் பகுதியில் மணல் அள்ளுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதூர் சந்திக்கு அண்மையில் ஒன்றுகூடிய பொதுமக்கள் ஏ-9 வீதியில் இருந்து புதூர் செல்வதற்கான முதன்மை வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


"எமது பிரதேசத்தின் மண் வளம் அநுராதபுரம் உள்ளிட்ட வேறு மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. எமது பகுதிகளில் வீடு கட்டுவதற்கு மணல் இல்லாமல் நாம் இருக்கிறோம். மண் அள்ளிச் செல்லும் வாகனங்களால் குறித்த வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. குறித்த வீதியால் மணல் ஏற்றிச் செல்வதை தடுப்பதுடன் எமது பகுதியில் உள்ள வளத்தை நாமே பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "எங்கள் வளங்களைச் சுரண்டாதீர்கள், இது கனரக வாகனம் செல்லும் பாதை இல்லை, எமது வளத்தை எமக்குத் தா" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர். எதிர்ப்புக் கோசங்களும் எழுப்பியிருந்தனர். (த-110)





# கணவனைத்தேடி வவுனியாவுக்கு வந்து பிள்ளைகளுடன் அலைந்தார் மனைவி



வவுனியா, ஓக. 10

மட்டக்களப்பிலிருந்து கணவனைத் தேடி வவுனியாவுக்கு குடும்பத்துடன் வந்த பெண், உணவு மற்றும் செலவுக்குப் பணமின்றித் தவித்த நிலையில் அவருக்குப் பணம் வழங்கி அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் மூன்று பிள்ளைகளுடன் வசிக்கும் குறித்த பெண்ணின் கணவன் வவுனியாவுக்கு வேலைக்குச் செல்கின்றேன் என்று கூறி இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். வீடு திரும்பவில்லை. குறித்த பெண் தனது மூன்று பிள்ளைகளுடன் கணவனைத் தேடி நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு வந்துள்ளார். அதிகாலை 3 மணிதொடக்கம் வவுனியா நகர் முழுவதும் தேடியலைந்த பின்னர் புதிய பேருந்து நிலையத்துக்கு அருகேயுள்ள பேருந்து தரிப்பிடத்தில் பிள்ளைகளுடன் காலை தொடக்கம் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் அவரிடம் கலந்துரையாடினர். அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குத் தகவல் வழங்கினர். அங்கு விரைந்த ஊடகவியலாளர்கள் குறித்த பெண்ணிடம் அவரின் கணவன் தொடர்பான தகவலை, அவரின் குடும்ப நிலை பற்றிய தகவலை கேட்டறிந்தனர்.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய நடமாடும் பொலிஸார் குறித்த பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டு கணவரைக் காணவில்லையென்று மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளுமாறும் தெரிவித்தனர்.

எனினும் மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்வதற்கும் உணவுக்கும் பணம் இன்றித் தவித்த அவர்களுக்கு சாப்பாட்டுக்கும் அங்குநின்றிருந்த சிலர் [illegible] செய்தனர். (த-ரி4)

## மூட்டுவாதம் தொடர்பான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மூட்டுவாத நோய் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர் விரிவுரை ஆற்றவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இன்றிலிருந்து

# வடக்கு கடற்பரப்பில் காற்று வலுவிழக்கும்

## பரவலாக மழைக்குச் சாத்தியம்

யாழ்ப்பாணம், ஓக. 10

வடக்குக் கடற்பரப்புகளிலும், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளிலும் தற்போழுது காணப்படும் காற்றுடன் கூடிய நிலை இன்றிலிருந்து குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:


வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் (குறிப்பாக பிற்பகலிலும் இரவிலும்) காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வரையும் காற்றின் வேகம் மெல்ல மெல்ல வலுவிழந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை காற்றின் வேகம் குறையக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், மத்திய, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம)



# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வு சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. ஐந்தாம் நாளான இன்று சனிக்கிழமை, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விஷ்ணு துர்க்கை ஆலயக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெறுகின்றது.

நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வின் ஐந்தாம் நாளான இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நிர்வாக உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாட் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதன்மை விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதத் துறைத் தலைவர் பிரம்மசிறி ம.பாலகைலாசநாத சர்மா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர்.

வேலணை மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட ஆலமாதனப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஹரிகர அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், செல்வி தே.ஜனனி மற்றும் மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தனின் 'அசுரர் பெற்ற வரம்' எனுந் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவின் போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாகச் செல்வி வைசாலி யோகராஜனின் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் இரவு 8.15 வரை இடம்பெறும் இசைக் கச்சேரி இடம் பெறும். இதில் பாட்டு பு.லதுர்சன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர். (கு)



## மூன்று வீடமைப்புக் கிராமங்களும் அறநெறிப் பாடசாலையும் திறப்பு

### அமைச்சர் சஜித் பங்கேற்றார்

வவுனியா, ஓக. 10

வவுனியாவில் 3 கிராமங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் மற்றும் அறநெறிப் பாடசாலை திறப்பு நிகழ்வில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்துகொண்டார். வவுனியா பிரதேச செயலக பிரிவில் காத்தார் சின்னக்குளத்தில் 'சபரிபுரம், அகத்தியர்புரம்' ஆகிய மாதிரிக் கிராமங்களும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பாவற்குளத்தில் 'கலைமகள் நகர்' ஆகிய மாதிரிக் கிராமமும் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டன.

ஒவ்வொன்றும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியில் 52 வீடுகள் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் தோட்டச் செய்கைக்கான கடன்கள், வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் வவுனியா மாவட்ட மேலதிகசெயலர் தி.திரேஸ்குமார், தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், வவுனியா பிரதேச செயலர், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலர், ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர், கட்சி ஆதரவாளர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வவுனியா தரணிக்குளம் பாலவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை 4 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டுள்ளது. அதனையும் அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்றுத் திறந்து வைத்தார்.

வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சின் 4மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இது அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.ராகுலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.கனீபா, பிரதேச செயலர் கா.உதயராசா, உயர் அதிகாரிகள், கலாசார அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் அறநெறி ஆசிரியர், ஊர்மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர். (து-110,ரி4)

## அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக மீள பிடியாணை

கொழும்பு, ஓக.10

முறிகள் மோசடி தொடர்பான வழக்கின் முதலாவது பிரதிவாதியான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு முதலாவது மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த நீதிபதிகளான சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகியோர் இந்தப் பிடியாணையை பிறப்பித்துள்ளனர்.

இந்த வழக்கின் 10 ஆவது பிரதிவாதியான அஜான் கார்திய புஞ்சிஹேவா என்பவருக்கான அறிவித்தல் அறிக்கையை தயாரித்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. அன்று அர்ஜுன மகேந்திரனுக்கான பிடியாணை தொடர்பான அறிக்கையும் மன்றுக்கு சமர்ப்பிக்கப் பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற முறிகள் மோசடி தொடர்பில் சட்ட மா அதிபரால், முதலாவது மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(எ)



# மன்னார் மடு விழாவை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளில் திருப்தி!

மன்னார் மாவட்டத்தில் மருதமடு மாதாவின் வருடாந்த ஆவணி பெருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப் பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் திருப்தி நிலை உள்ளதாக, பெருவிழா தொடர்பாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெற [illegible] கர்கள் இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் வருகை தருவது வழமையாகும். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த ஆண்டுக்கான திருவிழாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மடு ஆலய புனித யோசேவ்வாஸ் மண்டபத்தில் மன்னார் மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் மன்னார் ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, மடு ஆலய பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை மற்றும் திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்திலேயே மடுத் திருவிழாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக திருப்தி தெரிவிக்கப்பட்டது. (ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வட்டு.கிழக்கு முத்துமாரிக்கு புதனன்று தேர்

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டி பனை முத்துமாரியம்மன் கோவில் பெருந் திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 13ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்என்று கோவில் பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (கு-63)

### வரணிசபாவின் நூல் வெளியீடு

கலாபூசணம் வடவரணி சி.சபாவின் இரு நூல்கள் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நதியோர நாணல்கள் இலக்கியமன்றத்தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மதிப்புறு விருந்தினர்களாக நுவரெலியாஸ்ரீபாததேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வி.க.கமலநாதன், ஓய்வு நிலை அதிபர் சி.பவளேந்திரன், ஓய்வு நிலை நிர்வாக கிராம அலுவலர் ந.இராசகுமாரன், முன்னாள் வட மாகாண உறுப்பினர் கே.சயந்தன், வரணி மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி பாலாம்பிகை சிவகுமரன், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ஆ.சதாசிவம், தென்மராட்சி கலாசார அலுவலர் கு.றஜீவன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.மதன்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பேராசிரியர் ம.இரகுநாதன் நூல்களை வெளியீடு செய்யவுள்ளார். 'மரணிக்கும் மண்வாசனை' நூலின் முதற்பிரதியை வரணி வடக்கு இலக்கிய ஆர்வலர் க.குணரத்தினமும் ஓவியமும் சிற்பமும் என்ற நூலின் முதற்பிரதியைப் புலோப்பளை இலக்கிய ஆர்வலர் வ.செல்வராசா ஆகியோர் நூலின் முதற்பிரதியை பெறவுள்ளனர்.

ஆசிரியர் சி.சுந்தரமூர்த்தி மரணிக்கும் மண்வாசனை நூலின் ஆய்வுரையையும் சமுர்த்தி முகாமையாளர் சி.சிறீதரன் ஓவியமும்சிற்பமும்நூலின் ஆய்வுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (ம-159)





# ஆழிக்குமரன் நீச்சல் தடாகம் வல்வெட்டித்துறையில் திறப்பு

வடமராட்சி, ஓக. 10

வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குமார் ஆனந்தன் நினைவு நீச்சல் தடாகம் நேற்றைய தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.



குறித்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தலைமை விருந்தினராக கலந்து கொண்டு நீச்சல் தடாகத்தைத் திறந்து வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா யாழ்ப்பாண மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-ரி1)

## மணல் அகழ்வின் போது
# மணல் மேடு விழுந்து இருவருக்குப் பாதிப்பு

வவுனியா, பாவற்குளத்தில் மணல் அகழ்வின்போது மணல் மேடு இடிந்து வீழ்ந்ததில் இருவர் ஆபத்தான நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, பாவற்குளம் பகுதியில் நேற்று சிலர் ஆற்றில் மணல் அகழ்ந்து கொண்டிருந்தபோது மணல் மேடு இடிந்து வீழ்ந்ததில் இருவர் அகப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் மண்ணை வாரி எடுத்து, குறித்த இருவரையும் மீட்டனர். இருப்பினும் இருவரும் ஆபத்தான நிலையில் இருந்தனர். உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இருவரில் ஒருவரின் முள்ளந்தண்டு பகுதியில் பலத்த அடி ஏற்பட்டுள்ளதாகவும், மற்றையவர் குணமடைந்து வருவதாகவும் தெரியவருகிறது. பாவற்குளம் படிவம் இரண்டைச் சேர்ந்த மீரா முகைதீன் மாக்கின் (வயது -45), சூடுவெந்தபுலவைச் சேர்ந்த ஏ.ஜே.முஸித் (வயது -28) ஆகியோரே சிகிச்சை பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-ரி4)



### நல்லூர் ஆலய சுற்றாடலில் 30 நாய்கள் பிடிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் கடந்த மூன்று நாள்களில் மட்டும் இருபது வரையிலான கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையின் நாய்கள் பிடிக்கும் பிரிவினர் நேற்று ஆலயச் சூழலில் நாய்கள் பிடிப்பதற்குத் திரிந்தும் ஒரு நாய் கூட சிக்கவில்லை என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழா முடியும் வரைக்கும் ஆலயச் சூழலில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

மாநகர சபையால் பிடிக்கப்பட்ட அனைத்துக் கட்டாக்காலி நாய்களும் மிருக மருத்துவமனைத் திணைக்களத்தால் தடுப்பூசி ஏற்றப்பட்டு, அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, நாய்களை வைத்துப் பராமரிக்கும் காப்பகத்தில் மாநகராட்சி மன்றத்தால் ஒப்படைக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-17)

### பகுதிநேரப் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையால் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவுகளுக்கான அடிப்படை கணினிப் பிரயோகம், குளிரேற்றல் வளி சீராக்கல் ஆகிய பகுதிநேர பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ள விரும்புகின்றவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாகக் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பயிற்சி நிலையத்தின் முகாமையாளர் வே.சிறிகுகன் அறிவித்துள்ளார். (ம)



# வாகையடி வீதியின் சீரமைப்பு ஆரம்பம்!

கொடிகாமம், ஓக. 10

விடத்தற்பளை பாலாவி வட்டாரத்தில் வாகையடி வீதி செப்பனிடுவதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப வேலைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளரும் வட்டார உறுப்பினருமான செ.மயூரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி.சிவனேசன், சி.இரத்தினசிங்கம், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-159)

### நதியோர நாணல்கள் அமைப்புக்கு அன்பளிப்பாக நிழல்பட இயந்திரம்

சாவகச்சேரி, ஓக. 10

வரணி நதியோர நாணல்கள் அமைப்பினருக்கு நிழல்படப் பிரதி இயந்திரம் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டது. (ம-9)

### காந்தி சேவா சங்க கூட்டம் நாளை

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி - உருத்திரபுரம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

காந்தி சேவா சங்கத் தலைவர் சி.சிவகரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக வேதாந்த மட குரு பீடாதிபதி சிறிமத் வேத வித்தியாசாகர சுவாமிகளும் மதிப்புறு விருந்தினராக தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்க இணைச் செயலர் மு.சீ. தேவதாஸ்காந்தி ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-9)

## தென்மராட்சியில்
### 700க்கு மேற்பட்ட குடியிருப்புகளை சீரமைப்பு செய்வதற்கு நிதியுதவி

சாவகச்சேரி, ஓக. 10

தென்மராட்சிப்பிரதேசத்தில் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 500 குடியிருப்புகளுக்கு கூரை வேலைகள் செய்யவும் 219 குடியிருப்புகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மேற்படி நிதியை ஒதுக்கியுள்ளார். முழுமை பெறாத குடியிருப்புகளின் கூரை திருத்த வேலைக்கு தலா 28 ஆயிரம் ரூபா வீதமும் மின்னிணைப்பு வழங்குவதற்கு தலா 22 ஆயிரத்து 500 ரூபா வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லூர் கோவிலில் பக்தர்களை

# சோதனையிடும் பொலிஸாருக்கு நன்றி கூறுகின்றது முன்னணி

யாழ்ப்பாணம், ஓக.10

**நல்லைக் கந்தன் ஆலயத் திருவிழாவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் வழங்கும் சிறந்த பாதுகாப்புச் சேவைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் நன்றி தெரிவித்தார்.**

அங்கு செல்லும் பக்தர்களைப் பொலிஸார் உடல் சோதனைக்கு உட்படுத்துகின்றனர். இது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாநகரசபை அமர்வு நேற்றுமுன்தினமிரவு நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூவர் பொலிஸாரின் உடற்சோதனை பொதுமக்களுக்கு அசௌகரியமாகவுள்ளது. அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பொலிஸாருக்கு அதிக நிதி செலவிடப்படுவது தொடர்பாகவும் சுட்டிக்காட்டினர். மேற்கு வீதியில் பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டிருக்கும்நிரந்தர வீதித் தடையை நீக்கி மக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நாம் ஏற்கனவே பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசி, அதனை அகற்ற முடியாது என்று பொலிஸார் கூறியுள்ளனர் என்று முதல்வர் ஆனல்ட் பதிலளித்தார்.

தண்ணீர், தேநீர் மற்றும் சிற்றுண்டி என்பவற்றை மட்டுமே சபை வழங்குகின்றது. உணவு பொலிஸாரின் பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

பாதுகாப்புக்காகப் பணியில் இருப்பவர்களுக்கு தண்ணீர் மற்றும் சிற்றுண்டி வழங்குவது பொருத்தமானது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் பார்த்தீபன் கூற அதே கட்சியின் மற்றொரு உறுப்பினராகிய பத்மமுரளி பொலிஸார் சிறந்த முறையில் பாதுகாப்புக் கடமைகளைச் செய்கின்றனர். அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன் என்று தெரிவித்தார். இதற்கு முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவும் ஆதரவு தெரிவித்தார். (த-105)

# வானூர்தி நிலைய அபிவிருத்தி தொடங்கியமை நல்ல விடயம்

### கிழக்கு முன்னாள் முதல்வர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.10

மட்டக்களப்பு வானூர்தி நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரிய அம்சமாகும்.

இந்த விடயம் தொடர்பில் நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இந்தியத் தலைமை அமைச்சர், வானூர்தித்துறை அமைச்சர் மற்றும் இந்திய அரசின் முக்கிய தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். அன்று இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் எமக்களித்த வாக்குறுதிகளுக்கு அமைய இதனைத் தற்போது செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பலாலி விமான நிலையம் பன்னாட்டுத் தரத்துக்குத் தரமுயர்த்தபடும் அதேவேளை, கிழக்கிலுள்ள விமான நிலையமும் அவ்வாறே தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் கிழக்கின் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்திய அரசின் கவனத்துக்கு முன்வைத்திருந்தேன். இது தொடர்பில் எனது தனிப்பட்ட பயணங்களை இந்தியாவுக்கு மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் பேச்சு நடத்தியிருந்தேன்.

தற்போது பலாலி விமான நிலையப் பணிகள் முடிவுறும் நிலையில் மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் தொடங்கப்படவுள்ளமை மிகச் சிறந்த விடயமாகும். இதன் மூலம் கிழக்குவாழ் மக்கள் மட்டுமன்றி தமிழகத்தைச் சேர்ந்த திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை வாழ் மக்கள் பல்வேறு நற்பேறுகளைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தகத் துறைகள் மேன்மை பெறும் நிலையும் ஏற்பட்டுள்ளமை சிறப்பானதே. என்றுள்ளது. (எ-22)

## ‘குருதிபடாக் காயங்கள்’ நூல் வெளியீடு

சாவகச்சேரி, ஓக. 10

கவிஞர் வயலூரான் செல்வராசா சுதாகரன் எழுதிய ‘குருதிபடாக் காயங்கள்’ என்னும் மரபுக்கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி க.க.ஈஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச கலாசார அலுவலர் கு.ரஜீவன் நிகழ்த்துவார். நூலின் முதல் பிரதியை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய கேசவன் சயந்தன் பெற்றுக் கொள்வார். (ம-9)



# கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்துக்கு அடிக்கல்

மருதங்கேணி, ஓக. 10

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை நடைபெற்றது.

நிகழ்வு கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் ச.வேந்தன், மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாண அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர், பொருளாதார அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், கிராமமட்ட பொது அமைப்புகளின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கட்டடம் அமைக்க மூன்று பரப்புக் காணியை ஆனந்தராசா இன்பமலர் தம்பதியினர் வழங்கியிருந்தனர். (த-160)

## ‘மிஸ் இங்கிலாந்து’ இறுதிச் சுற்றுக்கு ஈழத்தவரின் மகள்



மன்னார், ஓக. 10

‘மிஸ் இங்கிலாந்து’ பட்டம் பெற இறுதிச் சுற்றுக்கு, மன்னார் உயிலங்குளத்தைச் சேர்ந்த செல்வி. டிலானி செல்வரெத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வரெத்தினம் கவிப்பிரியா தம்பதியினரின் புதல்வியான இவருக்கு (வயது-20). பெற்றோர் பிரிட்டனில் வசிக்கும்போது 1999ஆம் ஆண்டு டிலானி பிறந்துள்ளார்.

மிஸ் இங்கிலண்ட் போட்டிக்கு 25 ஆயிரம் பேர் பங்குபற்றியிருந்தனர். இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட 54 போட்டியாளர்களுள் ஒருவராக டிலானி இடம்பிடித்துள்ளார்.

டிலானியின் தந்தை மன்னார் மாவட்டத்தையும் தாய் கிளிநொச்சி வட்டக்கச்சியையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த-213)

# இந்திய மீனவர்கள் ஏழு பேருக்கு 4 வருடங்கள் சிறைத் தண்டனை

### 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது மன்னார் நீதிமன்று

தலைமன்னார், ஓக. 10

தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 7 பேருக்கும் 4 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து மன்னார் நீதிமன்று, தண்டனையை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 28ஆம் திகதி கடற்படையினரால் இழுவைப் படகுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். யோசப் பர்ணாந்து (வயது - 36), பெனிற்றோ (வயது - 38), இஞ்சாசி (வயது - 22), சத்தியசீலன் (வயது - 37), நாகராஜ் (வயது- 42), சுப்பிரமணியம் (வயது - 37) முனியசாமி (வயது, - 49) ஆகியோரே கைது செய்யப்பட்டிருந்த னர்.

இவர்கள் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுவிளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்தவழக்குவிசாரணைக்குவந்தது. 1979ஆம் ஆண்டு 59ஆம் இலக்க வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட 2018ஆம் ஆண்டின் முதலாம் [illegible] வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் நான்காவது பிரிவை மீறிய குற்றச்சாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதே சட்டத்தில் ஐந்தாவது பிரிவில் இலங்கை எல்லைக்குள் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதிப் பத்திரமின்றி மீன் மற்றும் இறால் பிடித்தமைக்கு மேலும் இரு வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவர்களிடம் கைப்பற்றப்பட்ட பணம் 150 ரூபாவையும், இரண்டு அலைபேசிகளையும் அவர்களிடமே கையளிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்களை வெளிநாட்டவர்கள் தடுத்து வைக்கப்படும் மீரியகம என்ற முகாமில் தடுத்து வைத்து அவர்களின் நாட்டுக்கு நாடு கடத்தவும் நீதிவான் மா.கணேசராஜா கட்டளை பிறப்பித்தார்.

அவர்கள் பயணித்த கடற்றொழில் உபகரணங்களின் உரிமையாளர் அல்லது இவற்றை வாடகைக்கு அமர்த்தியிருந்தவரை நீதி மன்றுக்கு வருமாறு இந்தியத் தூதரகத்துக்கும் அறிவிக்குமாறும் அதன் பிரதியை மன்னார் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார். வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-60)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 10

இதயராசனின் ‘நானும் என் தேவதையும்’ கவிதை நூல் வெளியீடு எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண சிவன் பண்ணை வீதியிலுள்ள படிப்பக மண்டபத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் என்.ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை சுன்னாகம் உதவிக் கல்விப் பணிப்பாளர் இயல்வாணன் வழங்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மறுமலர்ச்சிக்கான சேவையை நாடு முழுவதிலும் நடத்தத் திட்டம்

## இன்று முதல் நடமாடும் சேவை கொழும்பில்

கொழும்பு, ஓக.10

இந்து சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை, முதற்கட்டமாக இன்று சனிக்கிழமை வடகொழும்பிலும், 17ஆம் திகதி தென் கொழும்பிலும், 18ஆம் திகதி அவிசாவளையிலும் நடைபெறவுள்ளது. ஏனைய மாவட்டங்களிலும் உடனடியாக இந்த நடமாடும் சேவையை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சமய விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால், 'உதயம் மக்கள் சேவை உங்கள் ஊர் தேடி வரும் அரச சேவை' என்ற பெயரில் இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு மற்றும் அவிசாவளையைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இந்த இந்து சமய நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. இவற்றுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடமாடும் சேவையில், இலங்கை தேசிய இந்து மகாசபை உருவாக்கம் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துதல், இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள், தமிழ்க் கலைமன்றங்கள் என்பவற்றை பதிவு செய்தல், இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள், தமிழ்க் கலைமன்றங்கள் என்பவற்றின் தகவல்களைப் பெறுதலும் மீள்பதிவு செய்தலும் மற்றும் அவற்றின் நிர்வாக நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கல், அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிணக்குகளுக்குத் தீர்வு காணல், இந்து அறநெறிப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல், இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் தகவல்களைப் பெறுதலும் பதிவு செய்தலும், அந்த ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், இந்து அறநெறிப் பாடசாலைகளுக்குப் புதிதாக ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளல், இந்துக் குருமார்களின் தகவல்களை பெறுதலும் பதிவு செய்தலும், அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், தமிழ்க் கலைஞர்களின் தகவல்களைப் பெறுதலும் பதிவு செய்தலும் போன்ற செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. (ம-21)



### தேர்தல் காலத்தில்

# இலங்கை அரசு அழைத்தால் ஐரோப்பிய கண்காணிப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கை அரசு விரும்பினால் தேர்தல் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருவார்கள் இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்பு நிபுணர்கள் குழுவுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கையில் எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தல்களின்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அழைத்தால், அவர்கள் இந்த கண்காணிப்புக்கு வருவதற்கு அவசியமான காரணங்கள் குறித்து ஆராயும் பொருட்டே இந்த நிபுணர்கள்குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிபுணர்கள் குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ரிச்சார்டோ செலரி, ஹன்ஸ் வெபர், டிமிற்ற லோன்னு, பவல் ஜர்ஸாக் மற்றும் லான் மில்லர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

# பேசிப் பிழைப்பு நடத்துவீர்களே தவிர சாதித்துக் காட்ட வக்கற்றவர்களே

### சிறீதரன் எம்.பிக்கு டக்ளஸ் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 10

உங்களால் எதையும் பேசிப் பிழைப்பு நடத்த மட்டும் முடியுமேதவிர, எதையும் சாதித்துக் காட்ட வக்கற்றவர்கள் என்பதையே நீங்கள் மெய்ப்பித்து வருகிறீர்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைச் சாடி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த 31ஆம் திகதிய உரையில் சிறீதரன் தனக்கு அவதூறு ஏற்படும் வகையில் பேசியிருந்தார் என்றும் அதற்குப் பதில் அளிக்கும் வகையில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார் என்றும் டக்ளஸ் தேவானந்தாவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எம்மீது இதுவரை சுமத்திய அவதூறுகளை உண்மையென அவர் ஒப்புவிக்க முடியுமானால், வெறுமனே கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல் உங்களுடைய அரசு, நீங்கள் கொண்டுவந்த ஆட்சிஎன்று கூறும் நீங்கள் அதை வைத்து ஏன் நீங்கள் எங்கள் மீதான ஒரு நீதிவிசாரணையை நடத்த முடியாமல் இருக்கின்றீர்கள்?

தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால் நீங்கள் வாக்குகளை அபகரித்து அரசியல் பிழைப்பு நடத்தக் காரணங்கள் இல்லாமற் போய்விடும். அதுபோலவே எம்மீது அடிக்கடி அவதூறு பரப்பும் நீங்கள். எம்மீதான நீதி விசாரணையை நடத்தி அதற்கு நியாயத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் தொடர்ந்தும் உங்களால் எம்மீது அவதூறுகளைப் பரப்பக் காரணம் இல்லாமற் போய்விடும். ஆகவேதான் உங்கள் அரசியல் பலத்தை வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைத்தான் உங்களால் காண முடியவில்லை. அதே அரசியல் பலத்தை வைத்து அடுத்தவர் மீதான உங்கள் அவதூறுகளுக்கு ஒரு நீதிவிசாரணையை ஆவது நீங்கள் நடத்திக்காட்டலாமே.

தமிழரின் விடுதலைக்காக சிறு இறகைக்கூட இழந்திருக்காத கூரைக்கோழிகள். இன்று புலிகளின் பெயரைச் சொல்லிப் பிழைப்பு நடத்துவது ஏன் என்று கேட்கிறேன் - என்றுள்ளது. (து)

# வெற்றிபெறும் வேட்பாளருக்கே முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு!

### கிழக்கு முதலமைச்சர் நசீர் அகமட் திட்டவட்டம்

அரச தலைவர் வேட்பாளர்களில் யார் வெற்றிபெறுகின்றார்களோ அவருக்கே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும். கடந்த காலங்களைப்போன்று நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படும் எந்தவொரு ஏற்பாட்டுக்கும் இனி இடமளிக்கமாட்டோம்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நஸிர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சமகாலத்தில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆளும் அதிகாரம் கொண்ட கட்சிகள் மீதும் அவற்றின் தலைமைகள் மீதும் நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. யாருக்கு ஆதரவளித்தும் நமக்கேதும் பிரயோசனம் இல்லை என்ற எண்ணமே வலுபெற்றிருக்கின்றது. உத்தரவாதங்கள் அனைத்தும் உதவாக்கரையானவை என்பதே மக்களின் தீர்வாக இருக்கிறது.

சமகாலத்தில் முஸ்லிம் சமூகம்எதிர்கொண்டுவரும்நெருக்கடிகள், பரிதவிப்புகள், பாராமுகங்கள் அவர்தம் அரசியல் பரப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆட்சிஅதிகாரங்களால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களும் சமாளிப்புகளும் இழுத்தடிப்புகளும் நம்பிக்கை அரசியல்காரணமாக முஸ்லிம் மக்களுக்கு கிடைப்பெற்ற வெறுமையின் பெறுபேறுகள் என்பதை நிரூபித்துள்ளன.

தொடர்ந்தும் முஸ்லிம் சமூகம் ஏமாறுவதற்குத் தயாரில்லை என்பதை கடந்த காலப் பட்டறிவு சிறப்பாக நமக்கு பாடம் படிப்பித்துள்ளது. ஆட்சி அதிகாரம் யார் வசம் இருக்கின்றதோ. அவர்களுக்கு ஆதரவளித்து எமக்குரிய உரிமைகளை உரிய முறையில் உத்தரவாதம் அளிக்கும் ஏற்பாடுகளின் ஊடாகப் பெற்றுக் கொள்வதே முக்கியமானது என்பதை நாம் தீர்க்கமாக உணர்ந்து செயற்பட முடிவு செய்திருக்கின்றோம்.

இதற்கான வழிநடத்தல்களையே எமது கட்சி தற்போது மேற்கொண்டு வருகின்றது. எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் எதுவித அச்சமுன்றி வாழும் நிலையை உருவாக்க நாம் கூட்டுணர்வோடு திட்ட மிட்டுச்செயற்பட முன்வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன் என்றுள்ளது. (எ)

# இலங்கைப் பயங்காரவாதிகள் பிலிப்பைன்ஸுக்கு ஊடுருவல்

### அந்த நாட்டு ஊடகங்கள் தகவல்

கொழும்பு, ஓக.10

இலங்கையைச் சேர்ந்த இரு பயங்கரவாதிகள் பிலிப்பைன்ஸுக்குள் ஊடுருவியுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸில் உள்ள பயங்கரவாதிகளுக்குக் குண்டு தயாரிப்பது மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களை தாக்குவது போன்ற விடயங்களில் பயிற்சிகளை வழங்குவதற்காக இலங்கையை சேர்ந்த தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மனிலாவின் பன்னாட்டு வானூர்தி நிலை அதிகாரிகள் இதை உறுதி செய்துள்ளனர். இருவரும் தற்கொலைகுண்டுதாரிகள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருவரது குடும்பத்தவர்களும் பிலிப்பைன்ஸில் வாழ்கின்றனர். இவர்களில் ஒருவர் பெண் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மார்க் கெவின் சம்கூன் என்ற பயங்கரவாதி இலங்கையின் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்தவர் எனவும், அவரது தாய் டுபாயைச் சேர்ந்தவர் தற்போது பிலிப்பைன்சில் பணிப் பெண்ணாக தொழில்புரிகின்றார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளைமற்றொருபெண்மணியும்பிலிப்பைன்ஸுக்குள் ஊடுருவியுள்ளார். இவர் இலங்கை பிலிப்பைன்ஸ் கடவுச்சீட்டுகளை கொண்டவர் என்றுமி பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் குண்டு தயாரிப்பு பயிற்சிகளை வழங்கியுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# வேட்பாளராக களமிறங்க சஜித் போராட நேரிடும்

### கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.10

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் நியமிக்கப்பட வேண்டுமானால் சஜித் பலவிதமான சவால்களுக்கும் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று மத்திய மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் கட்சியிலுள்ள மற்றுமொருவருக்கு வேட்பாளர்தகுதியைவிட்டுக்கொடுக்காது. ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றைப் பார்த்தோமேயானால், அரச தலைவர் தேர்தல் ஒன்று அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் வேட்பாளர் தெரிவில் பலவித முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது வழமை ஆகும்.

சஜித் பிரேமதாச பல போராட்டங்களை எதிர்க்கொண்டால் மாத்திரமே அரச தலைவர் வேட்பாளராவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (எ)

# கோத்தபாயவே தேசத் துரோகி!

### லக்ஷ்மன் காட்டம்

கொழும்பு, ஓக.10

அமெரிக்காவுடன் மேற்கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை தேசத் துரோகச் செயல் என்றால் அந்த தேசத் துரோகச் செயலைக் கோத்தபாய ராஜபக்சவே செய்தார். அதனால் கோத்தபாய ராஜபக்சவே தேசத் துரோகி.

இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கை அரசு மற்றும் பன்னாடுகள் மேற்கொள்ளவுள்ள ஒப்பந்தங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்கக்கோரி எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் [illegible] நேற்றுமுன்தினம் கொ[illegible] ஒத்திவைப்புத் தீர்மானம் மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பல மோசமான தன்மைகளை மாற்றி ஆரோக்கிய [illegible] உடன்படிக்கையே. நாம் [illegible] என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டை ஒருபோதுமே மறப்பதில்லை வீடுகள் தந்த உங்களையும் மறவோம்

## சஜித் முன்பாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

மன்னார், ஓக. 10

**நாடு முழுவதும் அரசதலைவர் தேர்தல் வேட்பாளர் பற்றிய கோசம் எழுப்பப்பட்டு வருகின்றது. ஒருபக்கம் கோத்தபாய ராஜபக்சவின் பெயரும் இன்னொரு பக்கம் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பெயரும் முன்மொழியப்படுகின்றபோதும், இன்னும் பல பெயர்களும் முளைக்கின்றன. எது எவ்வாறிருப்பினும் அரசதலைவர் தேர்தல் அறிவிப்பு வரும்போது தமிழ் மக்கள் சரியான முடிவெடுப்பர்.**

இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தவிசாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் ஜோசவ்வாஸ் நகர் மற்றும் ஜோசப் நகர் ஆகிய இரு மாதிரிக் கிராமங்களில் உள்ள வீடமைப்புக் கிராமங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:



நாங்கள் பல அமைச்சர்களிடம் பேசினோம். உதவி கோரினோம். ஆனாலும் ஏழைகளுக்குச் செயலாற்றக்கூடிய அமைச்சர் சஜித் பிரமதாசவே. உண்மையைக்கூற வேண்டுமானால் எங்களுடைய மக்களுக்கு வீடு தந்திருப்பவர் நீங்கள். ஆகவே அரசதலைவர் வேட்பாளர் தொடர்பாகத் தெரிவிக்கப்படுகின்றபோது, எங்கள் மக்கள் சரியான முடிவெடுப்பார்கள்.

தோட்டவெளிக் கிராமத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டபோதிலும் வீடுகள் கிடைக்காத பல குடும்பங்கள் இன்னும் உள்ளன. அத்தகைய குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்க முன்வர வேண்டும்.

நீங்கள் எங்களுக்கு வீடு தந்திருக்கின்றீர்கள். நாங்கள் வீடுகளை ஒரு போதும் மறப்பதில்லை. அதே போன்று வீடுகளைத் தந்த உங்களையும் மறக்கமாட்டோம் என்று மேலும் தெரிவித்தார். (த-56)

# ஐ.தே.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்வது இலகுவானது

## நளின் பண்டார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.10

2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்த எங்களுக்கு அடுத்த அரச தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை வெற்றி பெறச் செய்து கொள்வது பெரிய விடயமல்ல. அரச தலைவர் வேட்பாளரை தெரிவுசெய்யும் அதிகாரத்தை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச என்ற தனிநபர் ஒருவருக்கு வழங்கியுள்ளதன் மூலம் மீண்டும் ஏகாத்திபத்திய ஆட்சிக்கு எதிர்க்கட்சி அடித்தளமிட்டுள்ளது.

இவ்வாறு பிரதி அமைச்சர் நளின்பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் கட்டளைத் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றது. அதனால் தற்போது அரச தலைவர் வேட்பாளராக பலரும் பலரது பெயர்களை தெரிவித்து வருகின்றனர். எமது கட்சியில் இருந்து சிலரது பெயர்கள் தெரிவிக்கப்படுகின்றன. எமது கட்சி வேட்பாளர் தொடர்பில் எமது கட்சியின் செயற்குழு கூடி அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஜனநாயக முறைப்படி வேட்பாளர் ஒருவர் பெயரிடப்படுவார்.

ஆனால் எதிர்க்கட்சியில் இருந்து தெரிவிக்கப்படும் அனைத்து பெயர்களும் ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்களாகும். வேட்பாளரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. நாட்டு மக்கள் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கும்போது இவர்கள் மீண்டும் அதிகாரங்களை ஓர் இடத்தில் வைக்கும் வகையில் ஏகாதிபத்திய ஆட்சிக்கு அடித்தளமிட்டு வருகின்றனர்.

ஆர். பிரேமதாச அரச தலைவராக இருந்த பின்னர், அரச தலைவர் பதவி பல்வேறு காரணங்களால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லாமற் போயுள்ளது. தற்போது அதற்கான சந்தர்ப்பம் வந்திருக்கின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவரை அரச தலைவராக்க வேண்டும் என்ற ஆர்வம் ஆதரவாளர்கள் மற் றும் நாட்டு மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டிருக்கின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய முடியுமான நிலை எங்களுக்கு இருக்கின்றது.

2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவையே தோற்கடித்த எங்களுக்கு, இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை வெற்றிபெறச் செய்வது அவ்வளவு பெரிய விடயமல்ல. தற்போதும் நாங்கள் ஆட்சிசெய்த மூன்றரை வருடங்களில் அரசிலும் அமைச்சரவையிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் அரைவாசியே இருந்தது. அரச தலைவர் ஆரம்ப க் கட்டத்தில் மாத்திரமே எம்முடன் இணைந்து செயற்பட்டார். அதன் பிறகு சிநேக பூர்வமாக செயற்படவில்லை. இருந்தபோதும் நாங்கள் பெரும் வேலைத்திட்டங்களைமேற்கொண்டிருக்கின்றோம். தேசிய அரசில் இருந்து விலகியதன் பின்னர் கிராமிய மட்டத்தில் எந்த அரசாலும் மேற்கொள்ளாத கம்பெரலிய போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் எதிர்க்கட்சியின் அரச தலைவல் வேட்பாளர் யார் என்று எதிர்வரும் 11ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கின்றார். அவர்கள் அந்தக் குடும்பத்தில் இருந்து யாருடைய பெயரை அறிவித்தாலும் அங்கு பிரச்சினை ஏற்படும். எமது அணியில் இருந்து தெரிவிக்கப்படுபவர்கள் அனைவரும் புத்தி ஜீவிகள். அதனால் அவர்களில் யார் தெரிவுசெய்யப்பட்டாலும் அவர்களுடன் எம்மால் சுமுகமான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும் - என்றார். (எ-31)

# பயங்கரவாதம் பரப்பும் மார்க்கமாக இஸ்லாத்தைக் காண்பிக்க முயற்சி!

## மகரூப் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 10

அடிப்படை வாதத்தையும், பயங்கர வாதத்தையும் பரப்பும் மார்க்கமாக இஸ்லாத்தைக் காண்பிப்பதற்கு சிலர் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திசட்டத்தின் கீழான பிரேரணைமீதானவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்றுமதி, இறக்குமதியில் நாங்கள் வெளிநாடுகளின் மூலப்பொருளகளில் தங்கியிருக்கின்றோம். எரிபொருள் இறக்குமதி செய்யப்படுவது அரபு நாடுகளில் இருந்தாகும். அதேபோல் இங்கிருந்து அதிகமான பொருள்களை ஏற்றுமதி செய்வதும் அரபு நாடுகளுக்காகும். ஆனால் ஏற்றுமதியை ஊக்குவிக்க நேரடிப் பங்களிப்புச் செய்யும் அரபு நாடுகள் தொடர்பாக அண்மைக்காலமாக முன்வைக்கப்படும் தவறான கருத்துக்கள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

மேலும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்துக்கான முறையான அனுமதியைப் பெற்று ஆவணத்தைச் சமர்ப்பித்த பின்னரும் அந்தப் பல்கலைக்கழகத்தை ஒரு சமூகத்துக்கு எதிராக பழிதீர்க்கும் விடயமாகச் சிலர் பயன்படுத்துகின்றனர். இது இனங்களுக்கிடையில் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும். முஸ்லிம், இஸ்லாம், தௌஹீத், ஷரிஆ என்பன எம்முடன் தொடர்புபட்டவை. பௌத்தர்களின் வழிபாடுகள் பாளி மொழியிலும் இந்துக்களின் வழிபாடுகள் சமஸ்கிருதமொழியிலும்கொண்டு செல்லப்படுவதைப்போன்று முஸ்லிம்களின் வழிபாடு தொடர்பான செயற்பாடுகள் அரபுமொழியில் கொண்டு செல்லப்படுகின்றன.

குர்ஆன் என்பது இறைவனின் வாக்கியம். அது இறை சொல். அரபுப்பாசையிலேயே ஐந்துவேளைதொழுகையை மேற்கொள்ளவேண்டும். எந்தமொழியில் பேசினாலும் அரபு மொழியிலேயே ஐந்து வேளைத் தொழுகைக்கான ஓதல்கள் முன்வைக்கப்பட வேண்டும். அரபு மொழியைக் கற்பிக்கவேநாட்டில் மதரஸாக்கள் இருக்கின்றன. இங்கு பயங்கரவாதம் போதிக்கப்படுவதில்லை. இஸ்லாத்துக்குள் அடிப்படைவாதம் இல்லை.

ஸஹ்ரான் என்பவர் மௌலவி அல்லர். பன்னாட்டு வழிகாட்டலில் செயற்படும் பயங்கரவாதி. அதனால்தான் பத்து நாள்களுக்குள் அவரையும் அவருடைய கூட்டத்தாரையும் காட்டிக்கொடுக்க முடிந்தது. ஆனால் ஸஹ்ரான்56 ஆயிரத்துக்கும் அதிகமான பயங்கரவாதிகளை உருவாக்கிவிட்டுச் சென்றிருப்பதாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பௌத்த மத குருவான நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டியிருந்தார். இதன் மூலம் 10 இலட்சம் முஸ்லிம்களை யாவதுகைதுசெய்துதுன்புறுத்த வேண்டும் என்பதையே அவர்சொல்ல முயற்சிக்கின்றார் - என்றார். (ம-31)

# ரணிலுக்கு நெருக்கடி ஏற்படுத்த சஜித் தரப்பு பேரணிக்கு ஏற்பாடு

கொழும்பு, ஓக.10

சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்க வலியுறுத்தி, கொழும்பில் பிரமாண்டப் பேரணியொன்றை நடத்துவதற்கு சஜித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர். எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது. சுமார் 2 இலட்சம் மக்களைப் பேரணியில் கலந்துகொள்ள வைக்க வேண்டுமென சஜித் தரப்பு திட்டமிட்டுள்ளது. ஐ.தே.கவுக்குள் சஜித்துக்கு அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு மறுக்கப்பட்டு வரும் நிலையிலேயே இந்த அதிரடி நடவடிக்கைக்கு சஜித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு ரணில் மற்றும் சஜித் மூடிய அறைக்குள் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை. அரச தலைவர் வேட்பாளராக போட்டியிட விரும்புகின்றார் என்று தெரிவித்த ரணில், சஜித்தை தலைமை அமைச்சராக நியமிப்பதாகத் தெரிவித்திருந்தார். எனினும், சஜித் அதை ஏற்காமல், தான் அரச தலைவர் வேட்பாளராக களமிறங்குவதாகவும், ரணிலை தலைமை அமைச்சராக நியமிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதனால் இரு தரப்புப் பேச்சிலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இந்த நிலையிலேயே, சஜித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் பேரணி நடத்தத் திட்டமிட்டுள்ளனர். சஜித்தின் மக்கள் செல்வாக்கை நிரூபித்து, அதன் மூலம் கட்சித்தலைமைக்கு நெருக்கடி கொடுக்க சஜித் தரப்பு திட்டமிட்டுள்ளது. (எ)

# கோப் குழுவின் நடவடிக்கையை பார்க்க ஊடகங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஓக.10

அரச பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற ஆய்வுக் குழுவின் நடவடிக்கைகளை (கோப் குழு) பார்வையிடுவதற்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை முதல் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருந்ததாக என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு நேரத்தின்போதே இது தொடர்பாக சபாநாயகர் கருஜயசூரிய அறிவிப்பொன்றை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் நடவடிக்கைகள் ஊடகங்களுக்காகத் திறந்து விடப்படும். இந்த விடயத்தில் ஊடகங்கள் பொறுப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளும் என்று நான் நம்புகின்றேன். நாடாளுமன்றச் செயற்பாடுகளின் அடுத்தக் கட்ட நடவடிக்கையாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

அதேவேளை சபாநாயகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க இதேபோன்று துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கும் ஊடகங்களை அனுமதிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த சபாநாயகர் இறுதிக்கட்டமாக அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (எ-31)

# ஐ.தே.கட்சிக்குள் இருந்தே பொது வேட்பாளர் தெரிவு

## அமைச்சர் எரான் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.10

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தே பொது வேட்பாளர் நிறுத்தப்படுவார். அதில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் எரான் விக்ரமரத்ன. மொரட்டுவவில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இன்னமும் அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்யவில்லை. எமது கட்சிக்குள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கென ஒரு அமைப்பு உள்ளது. கட்சியின் செயற்குழு மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்வோம். ஐக்கிய தேசியக் கட்சியிலேயே தற்போது ஜனநாயகம் பின்பற்றப்படுகின்றது - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்முகாஷ்மீர் பிரிப்புக்கு பௌத்த பீடங்கள் வரவேற்பு!

கொழும்பு, ஓக.10

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தைப் பிரித்து, லடாக் யூனியன் பிரதேசத்தை இந்திய அரசு உருவாக்கியிருப்பதற்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

"பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 'லடாக்' பிராந்தியத்தை, தனி மாநிலமாக அறிவிக்க இந்திய அரசு எடுத்த முடிவை, ஒரு பௌத்த நாடாக இலங்கை பெரிதும் பாராட்டுகிறது.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான மத, அரசியல் மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும். அவர்களை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும் என்று சியாம் நிக்காயவின் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் வெளியிட்டுள்ள தனித்தனியான இரு அறிக்கைகளில் கூறியுள்ளனர்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டு வாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பன்மைத்துவ சமூகத்தை கொண்டிருந்த இந்தியா, நல்லிணக்கத்தை பாதுகாத்து வருகிறது. 70 சதவீத பௌத்தர்களைக் கொண்ட லடாக்கை ஒரு தனி மாநிலமாக அறிவிக்க முடிவு செய்திருப்பது ஒரு பௌத்த நாடான இலங்கைக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளார்.

அதேவேளை, லடாக்கை ஒரு தனி மாநிலமாக அறிவிக்கும் முடிவை மிகவும் பாராட்டுவதாகக் கூறியுள்ள அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர், "லடாக் பகுதிக்கு யாத்திரை செல்லும் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்." - என்றுதெரிவித்துள்ளார். (ஏ)

# கொழும்பில் குப்பை அகற்றல் 7 நாள்களாக முடங்கியுள்ளது

## மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

கொழும்பு, ஓக.10

கொழும்பில் தொடர்ந்து ஏழு நாள்களாகத் தெருவோரக் குப்பைகள் அதிகரித்து வருகின்றன. இவை முறையாக அகற்றப்படாமையால் குப்பைகளை வீதியில் குவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் பெரும் அசௌகரியத்தைச் சந்தித்து வருகின்றோம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக கொழும்பின் சில பாகங்களில் தெருவோரக் குப்பைகள் அதிகரித்து வருகின்றன. கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை, ஜம்பட்டா வீதி, ஜிந்துப்பிட்டி, புதுக்கடை, மாளிகாவத்தை, சீனா வீதி மற்றும் கிராண்ட் பாஸ் வீதி உள்ளிட்ட இன்னும் சில பகுதிகளில் அதிகளவான குப்பைகள் குவிந்து காணப்படுகின்றன.

இந்தக் குப்பைகள் குவிக்கப்பட்டுள்ளமையால் போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளையும் மக்கள் சந்தித்து வருகிறனர். மழையுடனான காலநிலைகாரணமாக நேற்று குப்பைக் கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பொது இடங்களில் கழிவுதண்ணீர்தேங்கி இருந்தன. குப்பைகளால் துர்நாற்றம் வீசியதையும் காணக் கூடியதாக இருந்தது.

"கடந்த ஏழு நாள்களாகக் குப்பைகள் முறையாக அகற்றப்படவில்லை. குப்பைகளைக் கொட்டுவதற்குப் பொதுவான இடம் ஒன்றும் இல்லை. இதனால் வழமைக்கு மாறாகக் குப்பைகளைவீதியோரங்களில் எறியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"நாங்கள் நடமாடும் முதன்மைப் பாதைகள் குப்பைகளால் நிறைக்கப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரு தினங்களுக்கு குப்பைகள் அகற்றப்படாமல் இருக்குமாக இருந்தால் கொழும்பின் முக்கிய பாதைகளில் போக்குவரத்து பெரும் அசௌகரியத்தைச் சந்திக்க வேண்டி வரும். பாதைகளை மூடும் அளவுக்கு குப்பைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன" என்று மக்கள் கூறுகிறார்கள்.

இதேவேளை - மக்கள் கூடும் பொதுச் சந்தைகளிலும் குப்பைகள் முறையாக அகற்றப்படாமல் ஒருபுறமாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. மாளிகாவத்தை பொதுச்சந்தையில் காணப்படும் குப்பைக் குவியலால் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதில் பெரும் சிக்கலைச் சந்தித்திருந்தனர். சில பகுதிகளில் மக்கள் பெருமளவு கூடும் கோவில் தெருக்களிலும், முதன்மைக் கடைத் தெருக்களிலும் குப்பைகளை அதிகளவில் காணக் கூடியதாக இருந்தது.

இது தொடர்பில் நகரசபை ஊழியர்களிடம் விசாரித்த போது,

"இதுவரை காலமும் கொழும்பை அண்டிய பகுதிகளிலுள்ள குப்பை சேகரிக்கும் பொதுவான இடங்களிலேயே சேகரிக்கும் குப்பைகள் கொட்டப்பட்டன. சில தினங்களாக வழமையாகக் குப்பை கொட்டும் இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. குப்பைகளைக் கொண்டுசெல்வதற்கு வழியில்லாமல் அகற்றப்படாமல் தெருவோரங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ளன." என்று கூறுகிறார்கள்.

2017 ஆம் ஆண்டு கொலன்னாவை மீதொட்டுமுல்லை குப்பை மேடு சரிவின் பின்னர் கொழும்பின் குப்பைக் கழிவுகள் கெரவலப்பிட்டியவில் கொட்டப்பட்டு வந்தன. ஆனால் கெரவலப்பிட்டியவிலும் குப்பைகளின் கொள்ளளவு அதிகரித்துள்ளது. இந்த நிலையில் குப்பைகளை முறையாக அகற்றி பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண கொழும்பு நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் தாம் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிவரும் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (த-61)

# குருநாகல் நகர சபை முதல்வருக்கு மறியல்

கொழும்பு, ஓக.10

குருநாகல் மேல் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்கொன்றில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாதமை தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த குருநாகல் நகர முதல்வர் துஷார சஞ்சீவ எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் மேன் நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்தியப் போதே நீதிபதி மேனகா விஜே சுந்தர இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு குருநாகல் ஹேவா பொல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை தாக்கி பின்னர் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி பணம் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக இவர் உட்பட 4 பேருக்கு எதிராக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ஏ)

# 1000 வருடங்கள் சென்றாலும் அழிவுகளை தமிழர் மறக்கார்

## ராஜபக்சவினருக்கு சிவமோகன் எம்.பி. பதிலடி

மன்னார், ஓக. 10

தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவதற்கு முன்னர் கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு நீங்கள் செய்த அட்டூழியங்களை ஒரு முறை நினைத்துப் பாருங்கள். ஆயிரம் வருடங்கள் கடந்தாலும் உங்கள் (ராஜபக்சவினர்) ஆட்சி ஒரு நரக ஆட்சி என்பதைத் தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் ராஜபக்சவினருக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தல் தொடர்பில் ராஜபக்சவினர் கருத்துக் கூறி வருகின்றனர். இவை பற்றிக் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

**வாக்களிக்கமாட்டார்களென்று ராஜபக்சவுக்குத் தெரியும்**

தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குக் கிடைக்காது என்று ராஜபக்ச சகோதரர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் உள்ளூரபய உணர்வை வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமலேயே வெற்றிபெற முடியும் என்கிறார்கள்.

**35 வீதமான வாக்குகளே எங்களுக்குக் கிடைத்தன**

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 35 சதவீதமான மக்களே வாக்களித்தனர். அதனால் மீதமுள்ள 65 வீதமான மக்கள் எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் தமக்கே வாக்களிப்பார்கள் என்று பஸில் ராஜபக்ச பகல் கனவு காண்கின்றார். இது ஒரு காலமும் நடக்கப்போவதில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது ஒரு குடும்பத் தேர்தல் என்று சில அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிப்பார்கள். வட்டார ரீதியாக தங்கள் கிராமங்களின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு தமது உறவுகளை அல்லது சமூகத்தை மையப்படுத்தி வாக்களிப்பார்கள். அதனால் ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் இரண்டு கட்சியில் தேர்தலில் போட்டியிட்டதை நேரில் கண்டுள்ளோம்.

உள்ளூராட்சியில் அதிகாரங்களைப் பிடிப்பதற்காக எல்லா கட்சியிலும் பலதரப்பட்ட நபர்கள் வேட்பாளர்களாக நின்று வாக்குச் சிதைவு ஏற்பட்டது. வடக்கு -கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் மட்டுமல்ல தென்னிலங்கை சிங்கள தேசத்திலும் இப்படித்தான்.

அதை வைத்து அரசதலைவர் தேர்தலிலும் அவ்வாறே தமிழ் மக்கள் பிரிந்து நிற்பார்கள். அதனால் வென்று விடலாம் என்று பசில் ராஜபக்ச பகல் கனவு காண்கிறார். இது வெறும் நகைப்புக்குரிய விடயம்.

**ஒன்றுசேர்ந்து நிற்க திட சங்கற்பம்**

தமிழ் மக்கள் உங்களுக்கு அடிக்கடி ஒரு செய்தியைச் சொல்லி வருகிறார்கள். அதை நீங்கள் கேட்கவில்லை. கடந்த அரசதலைவர் தேர்தலிலும் சொன்னார்கள். நீங்கள் கேட்கவில்லை. எமது மக்கள் தமிழர்களாக ஒன்றுபட்டு நிற்க திடசங்கற்பம் கொண்டுள்ளார்கள் என்பதை விரைவில் புரிந்து கொள்வீர்கள். தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கு என்று தென்னிலங்கையில் அனுப்பப்பட்ட முகவர்களின் முகத்திரைகளை மக்கள் விரைவில் கிழித் தெறிவார்கள் என்று மேலும் தெரிவித்தார். (த-213)

# தலைமை அமைச்சருக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டி போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணம் வரும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டி போராட்டம் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர் வேலையற்ற பட்டதாரிகள்.

பட்டதாரிகள் நியமனத்தின்போது அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்த 2018ஆம் வெளியேறிய வெளிவாரிப்பட்டதாரிகளையும் உள்வாங்கிய அரசு அதற்கு முன்பு பட்டம்பெற்ற வெளிவாரி மற்றும் சில உள்வாரிப் பட்டதாரிகளைப் புறக்கணித்ததைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவட்டச்செயலகத்துக்கு வருகை தரும் தலைமையமைச்சருக்கு இரு வாசல் கதவுகளின் முன்பாக வாய்களுக்குக் கறுப்புத் துணி கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரியவந்தது. (மு-105)

# அர்ஜுன் மகேந்திரனை கைதுசெய்ய நிரந்தர நீதாய நீதிமன்று பிடியாணை

கொழும்பு, ஓக. 10

மத்திய வங்கி பிணைமுறி மோசடிகள் தொடர்பில் பிரதான சந்தேக நபரான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு நிரந்தர நீதாய நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

நிரந்தர நீதாய நீதிபதிகளான சம்பத் விஜேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் ஜம்பா ஜானகி ராஜரத்ன ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை இந்தப் பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

பிரதிவாதியான அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டுக்குச் சென்று நீதிமன்றத்தை புறக்கணித்து வருவதால், அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த பிடியாணை பிறப்பிக்குமாறு சட்டமாதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிஷடர் ஜெனரால் பிரியந்த நாவான கேட்டுக்கொண்டார். அதற்கு அமைவாக பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. (ஓ.5.71)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணியகம் ஊடாக வெளிநாடு சென்றால் எவ்வளவோ நன்மைகள்

*அமைச்சர் தெரிவிக்கிறார்*

கொழும்பு, ஓக. 10
வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடாக வெளிநாடுகளுக்குச் செல்வதனூடாக எவ்வளவோ பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆகவே, சட்டரீதியாகவே வெளிநாடுகளுக்குச் செல்லுங்கள். பணியகத்தின் ஊடாகச் செல்லாதவர்கள் பணியகத்தின் ஊடாகக் கிடைக்கும் எவ்வளவோ வரப்பிரசாதங்களை இழக்கின்றனர். அவற்றின் பெறுமதி தெரியாதுள்ளனர்.
இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.
வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் இலங்கையரின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையிலும், பாது காப்பு, காப்புறுதி, நலன்கள் மற்றும் வரப்பிரசாதங்களை வழங்கும் வகையிலுமான 'ரன் பியா பத்' வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று இடம்பெற்றது.
அதில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தத் திட்டத்தின் ஊடாக தொழிற்பயிற்சி வழிகாட்டல் மற்றும் சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதுடன், மருத்துவ வசதிகள் மற்றும் எதிர்பாராத சம்பவங்கள் இடம்பெறும்பொழுது கைகொடுக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காப்புறுதி சேவையும் நடைமுறைப் படுத்தப்படும்.
கடன் வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் சிறந்த அனுகூலங்களுடனான உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டில் தொழில் புரிவோரின் பிள்ளைகளுக்கான பாடசாலைக் கல்விக்கு ஊக்கமளித்தல் மற்றும் புலமைப்பரிசில் என்பன வழங்கப்படும் - என்றார்.

**அமைச்சர் மங்கள சமரவீர**

இந்தத்திட்டத்தினூாகவெளிநாடுகளுக்குச் செல்வோருக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுவதுடன், பல சலுகைகளும் வழங்கப்படும். கடந்த வருடம் வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் ஊடாக 7 000 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு வருவாயாகக் கிடைக்கப்பெற்றது - என்றார். (த-61)

# கோத்தாவை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயார்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக.10
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராகவே உள்ளதென அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் தேர்தலில் வெற்றியை தனதாக்கக் கூடிய வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கூட்டணி அமையும்.
எதிரணியில் அரச தலைவர் வேட்பாளராகக் கோத்தபாய, நிறுத்தப்படுவாராயின் மிக்க சந்தோசம். நாம் அவருக்கு எதிராக போட்டியிடுவதற்கு தயாராகவே உள்ளோம்.
எமது கட்சியை சேர்ந்த சிலர் கோத்தபாயவைச் சந்தித்தனர் என்று கூறும் ஊடகச் செய்திகள் உண்மையானவைகள் அல்ல.
எமது கட்சி சார்பில் போட்டியிடவுள்ள அரச தலைவர் வேட்பாளர் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, சரத் பொன்சேகா ஆகியோரின் பெயர்களே பெரும்பாலானோர்களால் முன்மொழியப்பட்டுள்ளன - என்றார். (எ)

# எக்னெலிகொட கடத்திக் கொலை நீதிபதி குழு நியமிக்க கோரிக்கை

கொழும்பு, ஓக.10
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்காக மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை நியமிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர், நீதியரசரிடம் கோரியுள்ளார்.
ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்காக மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை நியமிக்க வேண்டும் என்று இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் அரச சட்டத்தரணி நிஷார ஜயரத்ன நேற்றுத் தெரிவித்துள்ளார்.
2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி, இரவு 8 மணியளவில் கொழும்பு கொஸ்வத்தை என்ற இடத்தில் வைத்து, பிரகீத் எக்னெலிகொட காணாமல் போயிருந்தார் என்று முறையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் 2010ஆம் ஆண்டு இலங்கையில் அரச தலைவர் தேர்தல் நடப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.
பிரகீத் எக்னெலிகொடவை அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்சவின் தரப்பினரே கடத்தினர் என்று அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார். ஆனாலும் இந்த குற்றச்சாட்டுக்களை மகிந்த தரப்பினர் மறுத்து வருகின்றனர்.
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன நாள் முதல் இன்று வரை பன்னாட்டு நிறுவனங்கள், சுயாதீன அமைப்புக்கள் அவருக்காக குரல் கொடுத்து வருகின்றனர். (எ)

# அரச தலைவர் இழுபறி: ரணில்- ராஜித சந்திப்பு

கொழும்பு, ஓக.10
அரச தலைவர் வேட்பாளர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இழுபறி நிலைமை உள்ள நிலையில், அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன், ரணில் விக்கிரமசிங்க அவசர சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடந்துள்ளது. எனினும் அந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் எந்தத் தகவல்களையும்வெளியிடவில்லை.
ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள்அனைவரும் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாகதீர்மானம்ஒன்றை எடுக்க நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும் என்று கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரசிங்க வுக்குக் கடிதம் ஒன்றைக் கையளிக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.
77 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 77 பேரில் பெரும்பாலானவர்கள் இந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கையெழுத்து இட்டுள்ளார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவுசெய்த பின்னரே புதிய கூட்டணி அமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கருதுகின்றனர். எனினும், கூட்டணியை அமைத்த பின்னர் வேட்பாளர் யார் என்பதை தெரிவுசெய்யலாம் என்று கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார்.
ரணில் விக்கிரமசிங்கவுடன், அமைச்சர் ராஜித சேனாரத்ன, அவரது மகன் சத்துர சேனாரத்ன எம்.பி, ஜாதிக்க ஹெல உறுமய கட்சித் தலைவர் சம்பிக்க ரணவக்க, ரவி கருணாநாயக்க, கரு ஜயசூரிய ஆகியோர் இருக்கின்றனர். சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு இந்தத் தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மறுமுனையில், சஜித் பிரேமதாச வைக் களமிறக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக்கட்சியின் பெரும்பான்மை உறுப் பினர்கள் முயற்சித்து வருகின்றனர்.
அடுத்த அரச தலைவர் சஜித் பிரேமதாச என்று நாடு முழுவதும் சுவரொட்டி பரப்புரை ஒன்றையும் முன்னெடுத்துள்ளனர். அத்துடன், "சஜித் வருகிறார்" என்ற தலைப்பில் எதிர்வரும் 12ஆம் திகதி பதுளையில் பொதுக் கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரானஹரீன்பெர்னாண்டோ இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறார். சஜித் பிரேமதாசவை களமிறக்க வேண்டுமென ஒரு தரப்பு முயற்சித்து வரும் நிலையில், கட்சித் தலைமைப் பதவியைக் காத்துக் கொள்ளும் முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்க மும் முரமாக ஈடுபட்டுள்ளார். (எ-61)

# சுதந்திரக் கட்சியுடைய நகர்வுகள் செப்ரெம்பர் 3 தீர்மானிக்கப்படும்

## அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

சுதந்திரக் கட்சியின் எதிர்கால அரசியல் நகர்வுகள், தேர்தல் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் செப்ரெம்பர் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திரக் கட்சி மாநாட்டில் அறி விக்கப்படும்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
செப்ரெம்பர் 2ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த சுதந்திரக் கட்சியின் மாநாடு 3 ஆம் திகதி நடத்தப்படும். சுகததாச உள்ளக அரங்கில் கட்சித் தலைவரும், அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தில் இந்த மாநாடு நடைபெறும். கட்சியின் மூத்த உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொள்வார்கள்.
மாநாடு நிறைவடைந்ததன் பின்னர் கட்சியின் மாவட்ட மற்றும் தொகுதி கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. மாவட்ட கூட்டங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், தொகுதி கூட்டங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் தலைமையிலும் இடம்பெறும்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய 18 கட்சிகளுடனும் பேச்சு நடத்தியுள்ளோம். பல கட்சிகள் ஏற்கனவே எம்முடன் இணைந்துள்ளன. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடனான கூட்டணி அமைக்கப்படும்.
நிறைவேற்றதிகார அரச தலைவர் முறைமை நீக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் ஆர்வமாக இருந்தது. ஆனால் தற்போது அவர்களும் பின்வாங்குகிறார்கள்.
நிறைவேற்றதிகார அரச தலைவர் முறைமையைக் கொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியே அதனை நீக்குவதற்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு அனைத்துக்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (எ-61)

# கம்போடியா இலங்கை வானூர்தி சேவைகளை நடத்த ஆலோசனை

கொழும்பு, ஓக.10
கம்போடியா மற்றும் இலங்கைக்கு இடையே நேரடியான வானூர்திச் சேவைகளை நடத்துவது தொடர்பாக இரு நாட்டு தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளனர்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கம்போடியப் பயணத்தின் போது நேற்றுமுன்தினம் பிற்பகல் கம்போடிய தலைமை அமைச்சரைச் சந்தித்து உரையாடிய போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் கம்போடியத் தலைமை அமைச்சர் ஹுன் சென்னுக்கும் இடையிலான சந்திப்பு கம்போடிய தலைமை அமைச்சரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் நடைபெற்றது.
நீண்டகாலமாக இரு நாடுகளுக்கு இடையே காணப்படும் மத, கலாசார உறவுகளை நினைவுகூர்ந்த அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் அந்த உறவை அடிப்படையாகக்கொண்டு இருநாடுகளுக்கிடையிலான சுற்றுலா மற்றும் வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடினர்.
இரு நாடுகளுக்கிடையிலான நேரடி வானூர்திச்சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் சிவில் விமான சேவைகள் தொடர்பிலான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
நீண்டகாலமாக இரு நாடுகளுக்கு இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்பட்ட போதிலும் இதுவரையில் இரு நாடுகளிலும் தூதுவராலயங்கள் உருவாக்கப்படாமையைக் கருத்தில் கொண்டு அவற்றை துரிதமாக அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.
உள்நாட்டு சந்தை வாய்ப்புக்கள் மற்றும் நன்மைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் விரிவான கவனம் செலுத்தப்பட்டது. முதலீட்டு பாதுகாப்புக்காக சட்டபூர்வமான அடித்தளம் அமைக்கப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்திய அரசு, எந்தவொரு நாடும் மற்றுமொரு நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடாதென்பதே தனது வெளிநாட்டுக் கொள்கை என்பதையும் தெளிவுபடுத்தினார்.
ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் கம்போடிய தலைமை அமைச்சர் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தார். தலைவர்களினது சந்திப்பை தொடர்ந்து இருநாடுகளுக்கிடையிலான புதிய இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுத் தண்டனைக்கு எதிரான மூன்று மனுக்கள் தள்ளுபடி

கொழும்பு, ஓக. 10
சாவுத் தண்டனையை இல்லாமல் செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் தீர்மானத்துக்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

அரசமைப்பின் பிரிவு 120 மற்றும் 121 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இல்லை என்று கூறி சட்டமா அதிபர் ஆட்சேபனைகளை எழுப்பியதை அடுத்து இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த தீர்மானத்தை சட்ட ஆவணமாகக் கருதலாம் என்று அறிவிக்கும் நீதிமன்ற உத்தரவை கோரிய மனுதாரர்களில் பேராசிரியர் கமினா குணரத்ன மற்றும் வழக்கறிஞர் ராதிகா குமாரசுவாமி ஆகியோர் அடங்குவர்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொட சமர்ப்பித்த தீர்மானம் அரசமைப்புக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு, அதை நாடாளுமன்றத்தில் சாதாரன பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்று மனுதாரர்கள் வாதிட்டனர்.

இந்தத் தீர்மானம் அரசமைப்புக்கு விரோதமானது என்று சட்டமா அதிபர் அவருக்கு அறிவித்ததாக அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன இந்தவாரம் கூறியதை அடுத்து இந்த மனுக்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன. (ஒ.5)

# வடக்கில் பன்னாட்டு தரத்திலான நீச்சல் தடாகம் திறந்துவைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 10
பாக்கு நீரிணையை கடந்து சாதனையை நிலை நாட்டிய அமரர் ஆழிக்குமரன் ஆனந்தன் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்ட பன்னாட்டுத் தரத்திலான 'குமார் ஆனந்தன் நீச்சல் தடாகம்' உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இதனை நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் திறந்துவைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பிரதேச செயலர்கள், வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அமரர் ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக வல்வெட்டித்துறையில் நீச்சல் தடாகம் அமைக்க 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அப்போது நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவினால் முன்மொழியப்பட்டிருந்தமைக்கமைவாக இந்தத் திட்டம் 2017ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் வட பகுதியில் அமையும் முதலாவது பன்னாட்டுத் தரத்திலான நீச்சல் தடாகம் இதுவாகும். இது 8 வழித் தடங்களைக் கொண்டமைந்துள்ளது. கிளிநொச்சியில் இதையொத்த நீச்சல் தடாகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் கிளிநொச்சியில் அமைக்கப்படும் தடாகத்தில் 6 வழித் தடங்களே அமைக்கபட்டுள்ளன. மேலும் தடாகமானது பன்னாட்டுத் தரத்தில் நீச்சல் போட்டிகளை நடத்தக் கூடிய அதேவேளை, வருடம் முழுவதும் நீச்சல் பயிற்சிகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஒ.5,26,173,ரி1)

## சஜித்தையே...

வேட்பாளர் ஒருவரையே நாங்கள் பரிந்துரைத்துள்ளோம். இவ்வாறு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் ஆழிக்குமரன் நீச்சல் தடாகத்தை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். அவ்வாறு வெற்றி பெறக் கூடிய வேட்பாளர் ஒருவரை நாங்கள் விரைவில் பெயரிடுவோம். எங்களுக்குப் பல தரப்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் வெற்றி பெறக் கூடிய வேட்பாளர் சஜித் பிரேமதாசதான் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஆயினும் அப்படியாக ஒரு தீர்மானத்தை இதுவரையில் எடுக்கவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டியது நாடாளுமன்றக் குழுவும் செயற்குழுவுமேதான். அதனடிப்படையில் நாடாளுமன்றக் குழுவும் மற்றும் செயற்குழுவும் கூடி அங்கு பெரும்பான்மையானவர்கள் என்னத்தைச் சொல்கின்றனரோ அதனைத் தான் கட்சி செய்யும் என்றார். (ஒ,5,21,26,ரி1)

## சித்தார்த்தன்...

பாய ராஜபக்சவை இரகசியமாகவே சந்தித்தார். அது தொடர்பான தகவல்கள் வெளிவந்ததும், அதனை அவர் ஒப்புக் கொண்டார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் ஆழிக்குமரன் நீச்சல் தடாகம் திறக்கும் நிகழ்வில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'அரச தலைவர் தேர்தலில் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கப் போகின்றது' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, எந்தக் கட்சியும் இன்னும் வேட்பாளரை அறிவிக்கவில்லை. இவ்வாறான நிலமையில் நாங்கள் முடிவெடுக்கமுடியாது. எந்த அரசியல் கட்சியும் தங்களுடைய வேட்பாளர் யார் என்றோ? தங்களுடைய கொள்கை இது என்றோ? இதுவரை சொல்லவில்லை. வேட்பாளர்களை அறிவித்த பின்னர், அந்த வேட்பாளர்கள் தங்களுடைய கொள்கை என்ன என்பதை அறிவித்த பின்னர், அவர்களுடன் நாங்கள் சந்தித்து உரையாடிய பின்னர் முடிவுக்கு வருவோம் - என்றார்.

இந்துக்குருமார்களைச் சந்தித்தமை தொடர்பில் கேட்டபோது, இந்து மதத்துக்கு எதிராக நடத்தப்படுகின்ற வன்முறைகள் சம்பந்தமாக அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்துவதில்லை என்ற ஒரு குறைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள். கன்னியாவிலே அத்துமீறல் பௌத்த மயமாக்கல் என்பவற்றைத் தடுத்து நிறுத்தி நீதிமன்றக் கட்டளையை நான் பெறுவதற்கு முன்னதாகக் கூட நான் யாழ்ப்பாணத்திலே அவர்களைச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

எப்படி இதைக் கையாள்வது, எப்படித் தடுப்பது. இந்து சமயம் மாத்திரமல்ல, தமிழர்களுடைய கலாசார விழுமியங்களும் இப்போது தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. அதிலே முக்கியமாக இந்து சமயத்துக்குப் பெரிய சவால் வந்திருக்கிறது என்ற விடயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திருக்கேதீச்சரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை தொடர்பாக முக்கியமாக உரையாடினார்கள். அது தொடர்பாக அரசியல் தலைவர்களாக நாங்கள் ஏற்கனவே சில முயற்சிகளை எடுத்திருக்கிறோம். சமூகங்களுக்கிடையிலே பிளவு ஏற்படாதவாறு அதனை சுமுகமாகத் தீர்ப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுத்திருக்றோம். அது இன்னும் சாத்தியமாகவில்லை. அந்த வளைவை மீள அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்கு நாங்கள் அவர்களுக்கு உதவியாக இருப்போம் என்று உறுதிமொழி வழங்கியுள்ளேன். அது தொடர்பாக மிகவிரைவில் கத்தோலிக்க மதத் தலைவர்களையும் நாங்கள் சந்தித்துப் பேசுவோம். எங்களுடைய கத்தோலிக்க இந்து மக்களுடைய உறவைப் பாதிக்காத வகையில் நாங்கள் செயற்படுவோம். இந்து, கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல இஸ்லாமிய மக்களுடைய மத ஒற்றுமைகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எங்களுடைய கலாசார விழுமியங்களைப் பாதுகாக்க நாங்கள் முன்வரவேண்டும் என்று அவர்களுடைய கோரிக்கையை ஏற்றிருக்கிறேன். இவை தொடர்பில் நாங்கள் கிரமமாக சந்திப்புக்களை நடத்தி இடம்பெறுகின்ற மேலாதிக்க அத்துமீறல்களை எப்படித் தடுப்பது என்பது குறித்துப் பேசுவோம். நடவடிக்கைகளும் எடுப்போம் - என்றார்.

(ஒ.5,21,26,ரி1)

## வாள்வெட்டுக்...

தல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மானிப்பாயில் கடந்த மாதம் 20ஆம் திகதி, வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்தவர் என்று பொலிஸாரால் கூறப்படும் இளைஞன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தான். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் குறைவடைந்திருந்தது. இந்த நிலையில் நேற்று மீண்டும் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் ஆரம்பமாகியுள்ளது.

4 தொடக்கம் 5 உந்துருளிகளில் வந்த 6பேர் வீட்டின் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஜன்னல்களை உடைத்துள்ளதுடன், கதவுகளை வாளால் கொத்தி, உந்துருளியையும் அடித்து நொறுக்கிவிட்டு ஓடியுள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஒ.5,ரி1)

## வல்லையில்...

11 பவுண் தாலிக்கொடி நேற்றுப் பட்டப்பகலில் இனந்தெரியாதோரால் அறுத்துச் செல்லப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியை பணி நிமித்தம் யாழ்ப்பாணம் சென்றுள்ளார். அவர் நேற்றுப் பி.ப 3 மணிக்கு வீடு நோக்கி தனது உந்துருளியில் பயணித்துள்ளார். வல்லைப் பகுதியில் வைத்து அவரை பின் தொடர்ந்து உந்துருளியில் வந்த இனம் தெரியாத இருவர் அவரது தாலிக்கொடியை அறுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இதனால் நிலை தடுமாறி அந்தப் பகுதியில் அவர் வீழ்ந்துள்ளார்.

இதன்போது அவ்வழியே வந்தவர்கள் மர்ம நபர்களை துரத்தி பிடிக்க முற்பட்ட போதும் அவர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர். இதனையடுத்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஆசிரியை முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட பொலிஸார் சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் உள்ள மறைகாணிகளின் உதவியுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.5,ரி1)

## வேட்பாளராக...

கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நாளை அறிவிக்கவுள்ளார் என்று ராஜபக்சவினருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், ஒரு வார காலத்துக்கு கோத்தபாய ராஜபக்ச நாடு முழுவதிலும் உள்ள மத வழிபாட்டு இடங்களுக்குச் செல்லவுள்ளார்.

கொழும்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடக்கவுள்ள பொதுமக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில், அரச தலைவர் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை மகிந்த ராஜபக்ச வெளியிடவுள்ளார்.

அதேவேளை, கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமான உதவியாளர்கள், அவரது அரச தலைவர் தேர்தலுக்கான கொள்கை அறிக்கையை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ,5)

## இன்னொரு...

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக அமைக்கப்பட்ட நீச்சல்தடாகம் வல்வெட்டித்துறையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

உலக சாதனை படைத்தவர்கள் வல்லை மண்ணிலிருந்துதான் வந்துள்ளார்கள். இந்த மண்ணிலிருந்து இரண்டுபேர் உலக சாதனை படைத்துள்ளார்கள். ஒருவரை இன்று நினைவுகூருகின்றோம். மற்றையவரின் சாதனை பல்வேறு வடிவத்திலும் எழுத்திலே படத்திலே வரையப்பட்டிருக்கிறது. இந்தத் தருணத்தில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் முக்கிய வேண்டுகோளை முன்வைக்கின்றேன். இந்த நாட்டில் தலைவர்களை உருவாக்கும் பெருமையைக் கொண்டவர் அவர். அவர் நாட்டுத் தலைவராகுவதில்லை. ஆனால் நாட்டின் தலைவர்களை உருவாக்குவதில் முதன்மையானவர்.

மற்றொரு அரச தலைவருக்கான தேர்தல் அண்மித்துள்ளது. இந்த நேரத்தில் அவரின் பங்கு முக்கியமானது. நிகழ்வின் ஆரம்பத்திலேயே இந்த மண்ணில் தோன்றிய இரண்டு சாதனையாளர்கள் பற்றிச் சொன்னேன். அதில் ஒருவருக்கு நீச்சல் தடாகம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

மற்றையவரைப்போல் இன்னொருவர் எங்கள் மத்தியில் உருவாகுவாரா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது நீங்கள். தெற்கில் உள்ள நீங்கள். உங்களுடைய அரசியலும், நீங்கள் உருவாக்குகின்ற அரச தலைவர்களும்தான் அப்படி ஒன்று நடக்குமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கும். ஆகவே நிதானமாகச் செயற்பட்டு நாங்கள் பழைய நினைவுகளுடனே மட்டும், இந்தச் செயற்பாடுகளோடு தொடர்ந்து எதிர்காலத்தில் பயணிக்க ஆவன செய்யவேண்டும் - என்றார். (ஒ.5,26,173)

## இந்தியாவை...

கொண்டதன் மூலம் பிரபாகரன் போன்றவர்களை உருவாக்கி முப்பது ஆண்டுகள் நாம் பட்டபாடு நன்றாக அனைவருக்கும் தெரியும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இந்தியாவுடன் பகைத்த அதே தவறுகளை மீண்டும் செய்ய வேண்டுமா என்பதை ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும். நாம் நினைக்காத நேரங்களில் குண்டுகள் வெடித்து இறுதியில் மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே துறைமுகங்களை கைப்பற்றி அதன் மூலமாக நாட்டை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது' - என்றார் ராஜபக்ச. (ஒ.5,[illegible])

## குடியுரிமையை...

தனது அமைச்சுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என்று, உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் வஜித அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

(ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காஷ்மீர் விவகாரம்

# இந்திய சினிமா, கலாசார நிகழ்ச்சிகளுக்கு தடை விதிப்பு

### பாகிஸ்தான் அதிரடி

இஸ்லாமாபாத், ஒக.10

சினிமா உள்ளிட்ட அனைத்து வகையான திரைப்படம் சார்ந்த கூட்டு முயற்சிகளுக்கும் இந்தியாவுடனான அனைத்து கலாசார பரிமாற்றங்களுக்கும் தடை விதிப்பதற்குப் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தியா - பாகிஸ்தான் இடையே பிணக்கிலுள்ள ஜம்முகாஷ்மீருக்குச் சிறப்புச் சலுகையளித்து வந்த சட்டவரைபை இந்தியா நீக்கி அந்தப்பகுதியை இரண்டுபிரதேசங்களாகப் பிரித்தது.

இந்தியாவின் இந்தநடவடிக்கை 'ஒருதலைப் பட்சமானது' மற்றும் 'சட்டவிரோதமானது' என்று பாகிஸ்தான் கூறியது. இந்த விடயத்தை ஐ.நாவின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன், இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை முறித்துக்கொண்டது. இந்தியாவுக்கான தனது தூதுவரையும் திரும்ப அழைத்துக்கொண்டது.

அதன் தொடர்ச்சியாக இந்தியத் திரைப்படம் உள்ளிட்ட அனைத்து வகையான இந்திய கலாசார நிகழ்ச்சிகளுக்கும் பாகிஸ்தான் தடை விதித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

## காஷ்மீர் விவகாரம்

# இராணுவ நடவடிக்கையில் இறங்கும் திட்டம் ஏதும் எங்களுக்கு இல்லை

### பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத்.ஒக.10

காஷ்மீர் சட்ட நடைமுறையில் இந்தியா மாற்றத்தை ஏற்படுத்தியதை எதிர்த்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் திட்டம் தமக்கு இல்லை என்று பாகிஸ்தான் அறிவித்தது.

காஷ்மீர்மாநிலத்துக்குவழங்கப்பட்டுவந்த சிறப்புச்சட்டச்சலுகையைநீக்கி, அந்தமாநிலத்தை 2 பிரதேசங்களாகப் பிரிக்கும் இந்திய அரசின் நடவடிக்கைக்குப்பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்து இருந்தது. இந்தியாவுடன்தூதரகஉறவைத்துண்டிப்பதாகவும், வர்த்தகத்தைத் தடை செய்வதாகவும் கூறியிருந்தது. இந்த நிலையிலேயே இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக இராணுவநடவடிக்கைஎடுக்கும்திட்டம்எதுவும் இல்லை. அதற்குப்பதிலாக அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தானின் அயலுறவு அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷி தெரிவித்தார். காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்தபகுதிஎன்றும், உள்நாட்டுவிவகாரம் என்றும் இந்தியா கூறிவருகிறது. இதில் இந்தியா தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது. ஐ. நா. தீர்மானத்தின்படிகாஷ்மீர் பிரச்சினைக்குரியபகுதிஎன்றுபன்னாட்டுச் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. காஷ்மீர் மக்களோ, பாகிஸ்தானோ ஒருபோதும் இந்தியாவின் இந்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்தி அமைதி தீர்வுகாண்பதற்கு பாகிஸ்தான் எப்போதும் தயாராக இருக்கிறது. ஆனால் இந்தியா தான் எப்போதும் பேச்சு நடத்துவதில் இருந்து நழுவிச் செல்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



'காஷ்மீர் மக்களுடனான ஒற்றுமை' எனும் தலைப்பில் பாகிஸ்தானின் பெஷாவர்நகரில்பேரணிஒன்றுநடந்தது. பேரணியில்கலந்துகொண்டவர்கள் இந்தியக் கொடிக்கு தீ வைத்து கொளுத்தி கோசங்களை எழுப்பினர்.

# காஷ்மீர் விவகாரத்தில் எங்கள் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### அமெரிக்கா தெரிவிப்பு



வோஷிங்டன், ஒக.10

ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும்அமைதியையும், பொறுமையையும்கடைப்பிடிக்கவேண்டும். எங்கள்நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்தது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டிருந்தசிறப்புச்சலுகைகளைநீக்கிஅதைஇரண்டாகப் பிரித்து அறிவித்தது இந்தியா. இந்தியாவின் இந்த நடவடிக்கையை பாகிஸ்தான் கடுமையாக எதிர்த்ததுடன் ஐ.நாவிடமும் முறையிட்டது. இது விடயத்தில் பன்னாட்டு உதவியையும் கோரியுள்ளது.

இதனால்ஜம்முகாஷ்மீர்பகுதியில்பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் அயலுறவுத்துறைச்செய்தித்தொடர்பாளர் மோர்கன் ஓட்டாகஸ், ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்துச் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஜம்மு காஷ்மீர் விவகாரம் இந்தியா, பாகிஸ்தான் இடையிலானது.

இரண்டுநாடுகளும் அமைதியாகவும், பொறுமையாகவும் இருத்தல் வேண்டும் என்பது தான் எங்கள் நிலைப்பாடு. இதில் எந்தவிதத்திலும் மாற்றமில்லை என்று தெரிவித்தார்.

# இந்தியா– பாக். இடையேயான தொடருந்துச் சேவை நிறுத்தம்

புதுடெல்லி, ஒக.10

இந்தியா–பாகிஸ்தான்இடையே சேவையில் ஈடுபட்டு வந்த 'சம்ஜவுதா எக்ஸ்பிரஸ்' தொடருந்துச் சேவையை நிறுத்துவதாகவும் பாகிஸ்தான்ரயில்வேஅமைச்சர் ஷேக் ரஷீத் அகமது கூறியதாக இந்தியஊடகங்கள்செய்திவெளியிட்டன. அந்தத் தொடருந்தை இயக்கிவந்தபாகிஸ்தான்ஓட்டுநரும், ஊழியர்களும் இந்தியா - பாகிஸ்தான் இடையேயுள்ள வாகாஎல்லையில்அதைநிறுத்திவிட்டு, இந்தியாவுக்குள்நுழைவதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

இந்தியப்பகுதிக்குள்இந்தியஓட்டுநரும், ஊழியர்களும் தொடருந்தைஇயக்கட்டும்என்றுஅவர்கள்தெரிவித்தனர். இதையடுத்து இந்தியஊழியர்கள்அந்தத்தொடருந்தை அட்டாரி எல்லை வழியாக இந்தியாவுக்குள் கொண்டு சென்றனர். இதையடுத்தேஇந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

காஷ்மீருக்கு இந்தியா அளித்து வந்த சிறப்புரிமையை நீக்கி, காஷ்மீரை இரண்டுபிரதேசங்களாக இந்தியா அறிவித்துள்ள நிலையில், அதை எதிர்த்துத் தமது இந்தியத் தூதுவரைத் திரும்பப் பெறுவதாகப் பாகிஸ்தான் அறிவித்தது.

வணிகஉறவையும்துண்டித்துக் கொள்வதாக அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் பதிவாகியது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காஷ்மீரைச் சேர்ந்த மக்கள் வேண்டாமாம், காஷ்மீர் நிலம் மட்டும்தான் வேண்டுமாம்" என்று கூறுகின்ற காஷ்மீர் மக்கள் இந்தியாவின் அண்மைய அறிவிப்புக்குப் பிறகு அங்கு முகாமிட்டுள்ள இந்தியச் சிப்பாய்களுக்குக் கற்களால் எறியத் தொடங்கியிருக்கிறார்கள்.

## சிரியாவில் நிலமை மோசம்

# தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பமாகின அச்சத்தில் இலட்சக்கணக்கான மக்கள்

டமஸ்கஸ்,ஓக.10
சில நாள்கள் போர் நிறுத்தத்துக்குப் பிறகு சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் ஆரம்பித்துள்ள போரால் இலட்சக்கணக்கான மக்கள் அச்சத்தில் வாழ்வதாகஐக்கியநாடுகள்சபைதெரிவித்தது. சிரியாவில்ஆயுததாரிகளின்கட்டுப்பாட்டுப் பகுதியான இட்லிப் மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகக் கடும் தாக்குதலை அரச படைகள் நடத்தி வந்தன. கடந்தவாரம்போர்நிறுத்தத்துக்குஅரசதரப்பில்சம்மதம்தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில நாள்கள் போர் நிறுத்தப்பட்டது.



இந்த நிலையில் மீண்டும் ஆயுததாரிகளின் பகுதியில் தாக்குதலை நடத்தத் தொடங்கியுள்ளது அரச படை. இந்தத் தாக்கதல்குறித்துஐக்கியநாடுகள்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், சிரியாவில்கிளர்ச்சியாளர்கள்பகுதியில்மீண்டும் வன்முறை ஆரம்பித்துள்ளது. இட்லிப்மாகாணத்தில்உள்ளலட்சக்கணக்கான மக்கள் அச்சுறுத்தலில் வாழ்கின்றனர். போர் நிறுத்தத்தின்போது ஏராளமான மக்கள் வீடுகளுக்கு திரும்பி இருந்தனர். இந்த நிலையில் மீண்டும் தாக்குதலைஅரசுதொடர்வது ஆபத்தானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகளுக்கும் இடையே8ஆண்டுகளாகஉள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் ஆசாத் அரசுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பிலிப்பைன்சில் மோதல்

### 4 பேர் சாவு

மணிலா,ஓக.10
பிலிப்பைன்சில் இடதுசாரிப் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட 4 பேர் சாவடைந்தனர்.
பிலிப்பைன்சின் நீக்ரோஸ் ஆக்சிடெண்டல் மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது. புதியமக்கள்இராணுவப்படைஎனும்பெயருடைய இடதுசாரிப்போராளிகள் 20 பேர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இவர்களில் 3 பேர் சாவடைந்தனர். இராணுவத்தரப்பில் சாவடைந்தவர் தவிர 2 சிப்பாய்கள் காயங்களுக்கும் உள்ளாகினர். அத்தோடுபோராளிகளிடமிருந்துபல்வேறுவகையான உயர்ரகத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**
பிலிப்பைன்சில்இயங்கிவருகின்றபுதியமக்கள்இராணுவப் படை என்பது பிலிப்பைன்ஸ் கொம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த ஆயுதக்குழுவாகும். 1980ஆம்ஆண்டுமுதல் அவர்களுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்குப் பிலிப்பைன்ஸ் அரசு முயற்சி செய்து வருகிறது. இருப்பினும் அனைத்தும்தோல்வியிலேயேமுடிவடைந்தன. 1960ஆம் ஆண்டு முதல் இந்த அமைப்பினர் அங்கு தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயரமான கிளி

வெலிங்டன்,ஓக.10
ஒரு கோடியே 90 லட்சம் ஆண்டுகளுக்கு முன் கிளியின் உயரம் மனிதனின் உயரத்தில் அரைவாசியாக இருந்தது என்கிறது ஓர் ஆய்வு. அந்த ஆய்வின்படி அந்தக்காலகட்டத்தில்கிளியின்உயரம்ஒருமீற்றராக இருந்திருக்கிறது.
அதாவது மூன்று அடி மூனறு அங்குலம் உயரத்தில் இருந்திருக்கிறதுகிளி. நியூசிலாந்தின்தெற்குஒடாகோ பகுதியில், பல மில்லியன் ஆண்டுளுக்கு முன்பு வாழ்ந்த அந்தக் கிளியின் சிதிலங்கள் கிடைத்துள்ளதாகவும்இந்தக்கிளியின்எடையைக்கருத்தில்கொண்டால்(7கிலோ) இது மாமிச உண்ணியாகவும், பறக்கும் திறனற்றதாகவும் இருந்திருப்பது தெரிகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
கிளிஎன்றுசுட்டிக்காட்டப்படும்குறித்தபறவைபற்றிய ஆய்வின்முடிவு 'பயோலஜிலெட்டர்ஸ்' எனும்அறிவியல் சஞ்சிகையில் வெளியாகி உள்ளது. இதைவிட பெரிய கிளிகள் இந்த உலகத்தில் இல்லை.' என்றுள்ளார்இந்த ஆய்வுக்குத்தலைமைதாங்கிய ஆஸ்திரேலியாவின்வ்பிளிண்டர்ஸ்பல்கலைக்கழகத்தொல்லுயிரியல் பேராசிரியர் ட்ரிவோர் வொர்தி.



# சீனாவைப் புயல் தாக்கவிருக்கிறது சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது

சீனாவைப் புயல் தாக்க இருப்பதால் அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் அதிகபட்சமழைப்பொழிவுஏற்படும்எனும் குறிப்புடன்சிவப்புஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கையுடன் கூடிய அறிவிப்பைச் சீனாவின் தேசிய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டது. இந்தப் புயலுக்கு 'லெகிமா' என்று பெயரிட்டுள்ளது சீனாவின் வானிலை




ஆய்வு மையம்,
2014ஆம் ஆண்டுக்குப்பிறகு ஏற்படும் சக்தி வாய்ந்த புயல் இது என்றும் குறிப்பிட்டது. இதுசீனாவின்கிழக்குப்பகுதிகளைத்தாக்கியபின்னர்வடக்குநோக்கி நகர்ந்துசெல்லும்என்றும்கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் எச்சரிக்கை காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** நிகழ்வுகளை பார்த்து அதிருப்தி கொள்வீர்கள். நிலுவைப்பணி துரிதகதியில் செயல்பட வைக்கும். தொழில், வியாபாரத்தில் நடைமுறை சீராக தேவையான பணிபுரிவீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** உங்களின் தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலகாரணி பலம்பெறும். கூடுதல் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரச தீர்வு வரும்.

**மிதுனம்:** உங்கள் அணுகுமுறையில் நல்ல மாற்றம் ஏற்படும். விலகிய உறவினர் விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும்.

**கடகம்:** உங்களின் எதார்த்த பேச்சு, சிலர் மனதை பாதிக்கலாம். எதிர்வரும் பணிகளுக்கு, முன்னேற்பாடு செய்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** பணிகள் நிறைவேற தாமதமாகலாம். அனுபவசாலியின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள்.

**கன்னி:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி சிறப்பாக முன்னேற்றம் பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் தொந்தரவு தரலாம். பின்விளைவு உணர்ந்து செயல்படுவது நல்லது. உடன்பிறந்தவர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** பொது நல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி இஷ்ட தெய்வ அருளால் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும்.

**தனுசு:** நிகழ்வுகள் மாறுபட்டதாக இருக்கும். உங்களிடம் பழகிற நல்லவரையும் தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவது அவசியம்.

**மகரம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிர்மறையாக பேசுபவரிடமும் நல்அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கும்பம்:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**மீனம்:** தொடர்பில்லாத பணி குறுக்கிட்டு சிரமம் தரலாம். செயல்களில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க, நண்பர் உதவுவர். கூடுதல் பணச்செலவு ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில்

# நல்லூர் பிரதேச செயலக அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது


ஆட்டநாயகன் தனுசன்


லவக்காந்


சுகுமாரன்


வல்லவக்குமரன்

யாழ். மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்திய 12 பந்துப்பரிமாற்ற மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாண பிரதேச செயலக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் தனுசன் 38 ஓட்டங்களையும், சிவதர்சன் 32 ஓட்டங்களையும், சுகுமாரன் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கஜீவ், றஜீவன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய யாழ்ப்பாண பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது. அணி சார்பில் ஜெயகாந் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும், வல்லவக்குமரன் 36 ஓட்டங்களையும், கஜீவ் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் லவக்காந் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். சிறந்த ஆட்டநாயகன் விருதை நல்லூர் பிரதேச செயலக அணி வீரன் தனுசன் பெற்றுக் கொண்டார். இவருக்கு பெறுமதி வாய்ந்த உந்துருளியும் பரிசாக வழங்கப்பட்டது. சிறந்த பந்து வீச்சாளராக நல்லூர் பிரதேச செயலக அணி வீரன் லவக்காந்தும், சிறந்த களத்தடுப்பாளராக நல்லூர் பிரதேச செயலக அணி வீரர் சுகுமாரனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாண பிரதேச செயலக அணி வீரர் வல்லவக்குமரன் தெரிவு செய்யப்பட்டனர். (23)


அச்சுவேலி தோப்பு வாலிபர் வி.க.


நீர்வேலி காமாட்சி அம்பாள் வி.க.

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.10
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'பி' பிரிவு அணிகளுக்கு இடையில் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளன. இதில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.10
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இதில் வட்டுக்கோட்டை ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## கிண்ணம் வென்றது கொற்றாவத்தை சிவானந்தா

யாழ்ப்பாணம், ஓக.10
வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்த விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி சார்பில் எஸ். அஸ்வின் ஓர் கோலைப் பதிவு செய்தார். (23)



## விண்ணப்பம் கோரல்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் வலைப்பந்தாட்டத் தொடரை திருமகள் சனசமூக நிலையம் நடத்தவுள்ளன. மேற்படி போட்டித் தொடரில் பங்கு விரும்பும் கழகங்கள் 11ஆம் திகதிக்கு முன்னர் போட்டி ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கெள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (23)


அரியாலை சனசமூக நிலைய அணி


அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற உள்ளூர் ரீதியான கரம் போட்டித் தொடரில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி முதலாவது இடத்தையும், அரியாலை சனசமூக நிலைய அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. (23)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.10
ஐயனார் சனசமூக நிலையம் மின்ஒளியில் நடத்தும் ஐயனார் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் யுகராஜ் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதாயக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக எல்.பி.பினான்ஸ் லிமிட்டெட் முகாமையாளர் ஜெ.சுதர்சன், உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி தி.வடிவாம்பிகையும், மதிப்புறு விருந்தினர்களாக, ஐயனார் தேவஸ்தான ஆதீன கர்த்தாக்களான சி.ஐ.கந்தசாமி,பொ. வாமதேவன்,ஐயனார் சனசமூக நிலைய மூத்த உறுப்பினர் ச.சாந்தலிங்கம், ஐயனார் சனசமூக நிலைய முன்னாள் செயலர் இ.செந்தூரன், ஐயனார் சனசமூக நிலைய முன்னாள் செயலர் திருமதி கு.தமயந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்கிலாடியேற்றேர்ஸ் அணி கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஓக.10

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களுக்கிடையில் நடத்தப்பட்ட நவஜீவன்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் யங்கிலாடியேற்றேர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யங்கிலாடியேற்றேர்ஸ் அணியை எதிர்த்து றியல் வாரியர்ஸ் அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் யங்கிலாடியேற்றேர்ஸ் அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாவலர் நலன்புரிச்சங்கம் சுவிஸ் கிளையின் பொருளாளர் இ.பரா,சிறப்பு விருந்தினராக நாவலர் நலன் புரிச்சங்கம் சுவிஸ் கிளையின் செயலர் இ.இராஜசேகரம்,நெல்லியடி செல்லமுத்தூஸ் உரிமையாளர் எஸ்.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(23)





## மெய்வன்மைப் போட்டி;

# தகுதிகாண் போட்டியில் சாதித்த மானிப்பாய் இந்து மாணவர்கள்

யாழ்பபாணம்.ஓக.10

இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கம் சேர். ஜோன் ராப்பற் இளையோர் தகுதிகான் மெய்வன்மைப் போட்டி புத்தளம் வென்னப்புவ அல்பிரட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் ஏ.சிந்துஜன் 15 வயதின் கீழ் பிரிவில் 400 மீற்றர் ஓட்டத்தை 58.1வினாடிகளில் ஓடி வர்ணச் சான்றிதழையும், 800மீற்றர் ஓட்டத்தை 2.18.1வினாடிகளில் ஓடி வர்ணச் சான்றிதழையும் பெற்றார்.

அதே பாடசாலையைச் சேர்ந்த ஆண்களுக்கான 14 வயதின் கீழ் பிரிவில் ரி.தர்ஷன் குண்டுபோடுதலில் 9.90 மீற்றர் தூரத்தையும், தட்டெறிதலில் 24.50 மீற்றர் எறிந்து வர்ணச் சான்றிதழையும் பெற்றார். 15 வயதின் கீழ் பிரிவில் ஈட்டி எறிதலில் ஜெ.பிரவீன் 33.80 மீற்றர் எறிந்து வர்ணச் சான்றிதழையும்,13வயதின் கீழ்பிரிவில் என்.நிதுஷன் உயரம்பாய்தலில் 1.28 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழையும், 14 வயதின் கீழ் பிரிவு தட்டெறிதலில் சு.ஜெறோம் 23.80 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழையும்,15வயதின் கீழ்பிரிவு ஈட்டி எறிதலில் எஸ்..பவித் 33.95 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டனர். (23)

# நியூசிலாந்துக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

## சந்திமல் உள்ளடக்கம்

நியூசிலாந்து அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ள இலங்கை 15 பேர் கொண்ட அணியை இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி இலங்கை அணியுடன் 2 டெஸ்ட், மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டியானது எதிர்வரும் புதன் கிழமை காலியில் ஆரம்பமாக வுள்ளது.

இந்த நிலையிலேயே இந்தப் போட்டிக்கான இலங்கை அணியை இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அறிவித்தது. திமுத் கருணாரத்ன தலைமையிலான இந்தக் குழாமில் அஞ்சலோ மத்தியூஸ், ல்ஹிரு திரிமன்ன, தினேஷ் சந்திமால், குசல் மெண்டீஸ், குசல் பெரேரா, நிரோஷன் திக்வெல்ல, தனஞ்சய டிசில்வா, அகில தனஞ்சய, லசித் எம்புலுதெனிய, சுரங்க லக்மால், லஹிரு குமார, ஒசத பெர்னாண்டோ, லக் ஷான் சந்தகன் மற்றும் விஷ்வ பெர்னாண்டோ ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.






# பிரேசில் வீரர் கப்ரியலுக்கு 2 மாத தடையுடன், தண்டம்

மைதானத்தில் அத்துமீறி செயற்பட்ட பிரேசில் கால்பந்து வீரர் கப்ரியல் ஜீசஸுக்கு 2 மாதம் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் கடந்த மாதம் நடந்த கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேசில் அணி 3:1 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. இதில் இறுதிப்போட்டியின் 70ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி வீரர் கப்ரியல் ஜீசஸ் முரட்டு ஆட்டம் காரணமாக நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

அவர் மைதானத்தை விட்டு வெளியேறுகையில் போட்டி அதிகாரிகள் உட்கார அமைக்கப்பட்டு இருந்த தற்காலிக 'டக்அவுட்' மற்றும் வீடியோ உதவி நடுவருக்காக வைக்கப்பட்டு இருக்கும் மொனிட்டரை உதைத்து தள்ளினார். பிறகு நடந்த சம்பவத்துக்காக அவர் வருத்தம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்திய தென்னமரிக்க கால்பந்து அமைப்பு கேப்ரியல் ஜீசஸ் பன்னாட்டுப் போட்டிகளில் விளையாட 2 மாதம் தடை விதித்தது. அத்துடன் அவருக்கு ரூ.21 லட்சம் தண்டமும் விதிக்கப்பட்டது. மேலும் ஒழுங்கு விதிமுறையை மீறியதாக பிரேசில் கால்பந்து கூட்டமைப்புக்கு ரூ.10 லட்சம் தண்டமாகவும் விதிக்கப்பட்டு உள்ளது.

# மழையால் கைவிடப்பட்ட ஆட்டம்




இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி மீண்டும் மழையால் கைவிடப்பட்டது.இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இதில் நடைபெற்று முடிந்த மூன்று ரி -20 போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி களமிறங்கிய துடுப்பெடுத்தாடிய போது அணி 3 ஓட்டங்களைப் பெற்ற போது மழை காரணமாக ஆட்டம் 34 பந்துப் பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 13 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கு இழப்புக்கு 54 ஓட்டங்கள் எடுத்தபோது, மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜோப்ரா ஆர்ச்சரின் சுவாரஸ்ய பதில்

தன்னை ருவிற்றரில் அழகாக இல்லை என்று விமர்சித்தவருக்கு அனைவரும் பாராட்டும் வகையில் பதிலளித்துள்ளார் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர்.

சினிமா, விளையாட்டு என பல துறைகளில் உள்ள பிரபலங்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட சமூக வலைத்தளங்களைத் தொடங்கி அதில் தங்களது அன்றாட நிகழ்வுகளைப் பதிவிட்டு வருகின்றனர். இதன் மூலம் பொதுமக்களுடனும், தங்களது ரசிகர்களுடனும் தொடர்ந்து தொடர்பில் இருக்க முடிவதால் சமூக வலைத்தளப் பாவனை பிரபலங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. அந்த வகையில் இங்கிலாந்து அணி முதன்முதலாக உலகக் கிண்ணத்தை வெல்வதற்குக் காரணமாயிருந்த வீரர்களில் ஒருவர் ஆர்ச்சர். இவர் தனது சமூக வலைத்தளத்தில் தனது முதல் வீடியோவை தனது ருவிற்றர் பக்கத்தில் பகிர்ந்தார்.

அதில் ஆர்ச்சர் கிரிக்கெட் தவிர்த்து தனது குடும்பத்துடன் செலவிடும் காட்சிகள், வீடியோ கேம்ஸ் விளையாடுவது, கால்பந்தாட்டம் விளையாடுவது போன்றவை இடம் பெற்று இருந்தன.


இதில் ஆர்ச்சரின் ருவிற்றர் பதிவுக்குக் கீழே, ''நீங்கள் அழகாக இல்லை" என்று பயனாளர் ஒருவர் பதிவிட்டிருந்தார்.

இதைக் குறிப்பிட்ட ஆர்ச்சர், "ஆனால், நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்" என்று பக்குவமாகப் பதில் அளித்தார்.

மேல்மாடி வாடகைக்குண்டு
44/16, சங்கிலியன் வீதி, நல்லூரில் வீட்டின் மேல்மாடி மட்டும் உடன் வாடகைக்குண்டு.
077 005 9130

# கோக்லிக்கு நிகராக ஸ்மித், வில்லியம்சன்

## மைக் கேட்டிங் புகழாரம்



கிரிக்கெட் விளையாட்டில் இந்திய அணியின் வீரர் விராட் கோக்லி ஜாம்பவான் என்ற பட்டத்துக்கு தகுதியானவர் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக் கேட்டிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

சச்சின் பஜாஜ் மற்றும் ஆதித்ய பூஷண் எழுதிய 'அதிர்ஷ்டத்தை மாற்றுபவர்கள்' என்ற புத்தகம் மும்பையில் உள்ள ராயல் பாம்பே யாட்ச் கழகத்தில் வெளியிடப்பட்டது. இந்த விழாவில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக் கேட்டிங் கலந்து கொண்டார்.

அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்;

பன்னாட்டு கிரிக்கெட் சபையில் துடுப்பாட்டத் தரவரிசையில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். அவர் கிரிக்கெட் விளையாட்டின் மீது கொண்டுள்ள தீராத தாகத்தினால் அவருக்கு கிரிக்கெட் உலகையும் தாண்டி ரசிகர்கள் உருவாகியுள்ளார்கள்.

ஒருநாள், டெஸ்ட் மற்றும் ரி-20 என மூன்று விதமான போட்டிகளிலும் நிலைத்தன்மையோடு விளையாடுவதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை.

நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் மற்றும் ஆஸ்திரேலிய வீரர் ஸ்மித் இருவரும் விராட் கோக்லிக்கு இணையாக விளையாடி வருகின்றனர். இருந்த போதிலும் தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவிப்பதில் கோக்லியின் திறமை அசாத்தியமானது. எனவே தற்போது கிரிக்கெட் உலகில் ஜாம்பவான் என்ற பட்டத்துக்கு அவர்தான் தகுதியானவர். மேலும், எனக்கு டெஸ்ட் போட்டிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒருவர் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரர் ஆக உருவாக வேண்டுமெனில் முதலில் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டும் என கோலி கூறியுள்ளது அற்புதமானது - என்றார்.

# குருணால் பாண்டியாவுக்கு ஒருநாள் போட்டியில் வாய்ப்பு வழங்கவேண்டும்

## *வி.வி.எஸ். லஷ்மண் தெரிவிப்பு*

ரி-20 போட்டியில் சிறப்பாக விளையாடி வரும் குருணால் பாண்டியாவுக்கு ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என வி.வி. எஸ். லஷ்மண் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட்டில் குருணால் பாண்டியா சிறப்பாக விளையாடினார். இவர் 3 இலக்குகளைக் கைப்பற்றி 67 ஓட்டங்களைச் சேர்த்த அவருக்கு தொடராட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்த நிலையிலேயே ஒருநாள் கிரிக்கெட்டில் குருணால் பாண்டியாவுக்கு அதிக அளவில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று லஷ்மண் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

50 பந்துப்பரிமாற்றப் போட்டியில் அவருக்கு அதிக அளவில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், முழுமையாக 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசுவதுடன் 6ஆவதாக களமிறங்கி சிறப்பாக துடுப்பெடுத்தாடவும் முடியும்.

இளம் வீரர்களான நவ்தீப் சைனி, குருணால் பாண்டியா, தீபக் சாஹர் ஆட்ட நாயகன் விருதுகளை பெற்றதை பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. சைனி மிகவும் சிறப்பாக பந்து வீசினார்- என்றார்.

# கொல்கத்தா அணியின் உதவிப் பயிற்சியாளராக பிரெண்டன் மக்கலம்

ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் புதிய உதவிப் பயிற்சியாளராக நியூசிலாந்து அதிரடி வீரர் பிரெண்டன் மக்கலம் தெரிவு செய்யப்படவுள்ளார். இவர் பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும் இன்னமும் சில தனியார் ரி-20 போட்டிகளில் ஆடி வந்தார். ஆனால் சமீபத்தில் அனைத்து கிரிக்கெட்டிலிருந்தும் அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இவர் ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு 2008ஆம் ஆண்டு ஆடும் போது ஒரு போட்டியில் 158 ஓட்டங்களைப் பெற்று எதிரணிக்கு சிம்மசொப்பனமாக விளங்கினார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜாக் காலிஸ், சைமன் கேடிச்சி ஆகியோர் விலகியிருந்தனர்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக அவர் 5 பருவ காலங்களில் விளையாடினார். 2009 ஆம் ஆண்டு அணியை வழிநடத்தினார். இந்த நிலையில் அவர் அடுத்த ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா அணியின் உதவிப்பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளார்.




மரண அறிவித்தல்

சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள் (கண்ணன் ஐயா) (JP)

*(ஆலய முதல்வர் - யாழ் நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கோயில்)*
*பிரதமகுரு - யாழ் நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் ஆலயம்)*


தோற்றம் 06.12.1958 மறைவு 09.08.2019

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சதாசிவக்-குருக்கள் மகேஸ்வரக்குருக்கள் 09.08.2019 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சதாசிவக்-குருக்கள் - கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஸ்ரீ பாலசுந்தரக்-குருக்கள் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் பாசமிகு கணவரும் மேனகா. காயத்ரீ. பாலசதாசிவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சயந்தன் (மலேசியா). அகிலன் (லண்டன்). கார்த்திகா ஆகியோரின் மாமனாரும் தனலட்சுமி. காலஞ்சென்ற ஆறுமுகக்குருக்கள். சிவஸ்ரீ மகாலிங்க சிவக்குருக்கள் (JP) (ஆலய முதல்வர். யாழ் நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கோயில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ருக்ஷான். அர்ச்சனா. சாகித்தியா. கவினயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2019) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளப்படும்.

232, கனகரட்ணம் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.
(CS 27020)(14.17)
தகவல்
குடும்பத்தினர்.
075 040 1858/ 077 883 8751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.